280

. 1803. SEPTEMBER 1927

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
12 OCT 1927
MADRAS

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

...மெரிக்கன் சில்க் — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முள நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம்

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்குமேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முந்துங்கள்! இதுவே தருணம்!!

முத்தையாவ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1 ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2 ஷை காக்கி விலை	ரூ. 2—4—0.
,, 3 இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4 அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5 உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எவ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99. **சென்னை.**

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR
No.
12 OCT 1927
MADRAS

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)		ரூ.	8	0	0
அரைப்பக்கம்	ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம்	ஷை	ரூ.	2	8	0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி ,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,
EXPORT DEPARTMENT,
Post Box No. 99, **MADRAS**

சூரத் சில்க் புடவை.

கை நேசவில் நெய்தது. நல்ல பார்வையான புடவை அழகாக $1\frac{1}{2}$ இஞ்சில் கரைக்கு ஜரிகை பேட். முகதலேக்கு ஜரிகை. புது மாதிரியான ரகம். நாகரீகமான ஆடை.

1. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடல் சாதா ஜரிகைக் கரை ஜரிகை முக தலை புடவை 1க்கு ... ரூ. 12—0—0

2. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடலில் பட்டுப்பூ ரூ. 16—8—0

3. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடலில் ஜரிகை; தங்கக் கம்பி ரூ. 20—0—0

4. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் திக்கான ஜரிகைக் கொட்டடி ரூ. 25—0—0

5. 12 மு × 44'' உடல் சாதா ஜரிகை போட்ட ஜரிகை முகதலை ரூ. 10—0—0

☞ பச்சை மயில் கழுத்து, ரோஸ், ஆரஞ்சு, தங்கக் கலர், மேகவர்ணம் முதலிய கலர்களில் புடவை கிடைக்கும்.

K. S. Muthiah & Co.,

Export Dept.

Post Box 99 : : MADRAS.

மருந்துவாழ் மலையின் மாத்மியம்,

" அமிர்த சஞ்சீவி "

இது இந்தியாவின் தெற்கே அற்றமான கன்னியாகுமரிக்குச் சமீபித்திருக்கும் மருந்துவாழ் மலையிலிருந்து அனேக மூலிகைகளும் பச்சிலை வகைகளும் உயர்ந்ததும் விலை கூடின சாதனங்களைக் கொண்டு மலையாள வைத்திய நிபுணரால் முறை தவறாதபடி தயார் செய்யப்பெற்றது. இதை உபயோகித்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே எவ்வளவு பலஹீனனா யிருந்தாலும் நூதன யௌவனத்தையும் உற்சாகத்தையும் அடையும்படி செய்யும். சகல வியாதிகளையும் தீர்த்து ரத்தவிருத்தி, ஜீரணசக்தி, தாதுபுஷ்டி முதலியவைகளை உண்டுபண்ணும். பாலகன் முதல் விருத்தாள்வரை ஆண் பெண் இருபாலர்களும் உபயோகிக்கலாம்.

20 நாள் மருந்து ரூ. **3**. 40 நாள் மருந்து ரூ.**5**.

தபாற் செலவு வேறு.

M. R. Vaidiasala M. RAMASWAMI Co.,
Kottar, S. Travancore.

இனாம்! இனாம்!!

திருக்குறள் ஜெம் நோட்டு புக்

2 அணா தபால் ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 100-பக்கமுள்ள திருக்குறள் ஜெம்நோட்டு புக் ஒன்று அனுப்பப்படும்.

4 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஷை புக் 1-ம் அழகான புது மாதிரி திறவுகோல் வளையம் 1-ம் (Key Ring English Make) ஆக இரண்டும் அனுப்பப்படும்.

சொற்பக் காப்பிகளே கைவச மிருப்பதால் உடனே முந்திக் கொள்வது நலம்.

K. S. முத்தையா அண்டு கம்பெனி,

ஸில்க் ஹவுஸ்,

ஹைரோடு, திருநெல்வேலி.

ஸ்ரீ முனியோஹா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம் வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி
தபால் பெட்டி 99, சென்னை.

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, :: :: MADRAS.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹு புரட்டாசிமீ 1927 செப்டம்பர்மீ	இதழ் 2.

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 59
2. முரசு 60
3. காலக் குறிப்பு 61
4. சமண பாரதம் 67
5. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத் தலைவன் 75
6. ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள் ... 83
7. ஸ்ரீ ஹர்ஷ சரிதம்... 84
8. எனாதி நாயனார் சரிதை 89
9. மதுசாரம் 91
10. பெண்கள் பக்கம் 100
11. கடோரசித்தன் கதை 104
12. இல்லை 108

சித்திரப் படம்.

1. ஸ்ரீ காசி, பனாரஸ் ஸிட்டி, ரயில்வே ஸ்டேஷன்.

...நாடு ஆவணக் காப்பக நூலகம்
210371
சென்னை 600 008

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

ஆக்கமென் றுள்ளன வெல்லாம் பொருந்து
மரும் பொருளாய்ச்

சேக்கமலா தனத்துற்றாய் விண்ணுடர்
தினம் பணியுங்

தாக் கணங்கே யென்றமிழ்மாலை
கொண்டன்று சாற்றிய சொற்

காக்கவுந் தாமதஞ் செய்கின்றையே
யென்ன காரணமே.

முரசு

(முன் தொடர்ச்சி)

(6) ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவருமோர் குல மன்றோ ?
மேவியனை வருமொன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

(7) சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டை கள் செய்வார்.

(8) சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிர மாண்புரச் செய்வோம்.

(9) பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

(10) கண்களிரண்டினி லொன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடுங் காணீர்.

(11) தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலு மொன்றாய்—எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.

—பாரதி.

காலக் குறிப்பு.

(மயிலை சீனி வேங்கடசாமி தொகுத்தெழுதியது.)

தமிழ்ப்புலவர் காலத்தையும் தமிழ் நூல்கள் இயற்றப்பட்ட காலத்தையும் ஆராய்ந்தறிய அவாக்கொண்டு சென்ற சில தினங்களாக ஆராய்ந்தேன். அதன் பலனைச் சில காலக் குறிப்புகள் கிடைத்தன. கிடைத்தவரையில் அவற்றை இங்கு வெளியிடுகிறேன். ஏனைய குறிப்புகளைக்கிடைக்கும் போது வெளியிடுவேன். ஏனைய அன்பர்களும் தாங்கள் ஆராய்ந்தறிந்த காலக்குறிப்புகளை வெளியிடுவார்களாயின் அது தமிழ் மொழியின் சரித்திர ஆராய்ச்சிக்கு ஏற்ற துணையாக நிற்கும். நான் கண்ட இக்குறிப்பில் பிழையிருப்பின் தெரிவித்து உண்மையை வெளிப்படுத்துவது அறிவோர் கடனாம்.

சாலிவா.	கி. பி.	
1175	1253	சிவஞானசித்தியாரை அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்தார்.
1176	1254	இருபா இருபஃது ஷை சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது.
1177	1255	உண்மைவிளக்கம் மனவாசகங் கடந்தாரால் அருளிச்செய்யப்பட்டது.
1200	1278	உள்ளமுடையான் என்னும் நூலை திருக்கோட்டி நம்பி இயற்றினர்.
1228	1306	சிவப்பிரகாசம் உமாபதி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பட்டது.

சாலிவா. கி. பி.

1229 1307 திருவருட்பயன் ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1230 1308 வினா வெண்பா ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1231 1309 போற்றிப்பஃறொடை ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1232 1310 கொடிக்கவி ஷியாரால் அருளிச்செய்யப் பட்டது.

1233 1311 நெஞ்சுவிடுதூது ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1234 1312 உண்மைநெறிவிளக்கம் ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1235 1313 சங்கற்பநிராகரணம் ஷியாரால் அருளிச் செய்யப்பட்டது.

1446 1524 அரிச்சந்திர புராணம் வீரை, ஆசு கவிராயரால் இயற்றப்பட்டுப் திருபுலாணிச்சக்கரதீர்த்தக்கரை மேன் மண்டபத்தில் ஷியாரால் அரங்கேற்றப் பட்டது.

1469 1547 கமலாலய மகாத்மியம் சிதம்பரம் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பட்டது.

1514 1592 திருவாரூர்ப் புராணம் அளகை சம்பந்த முனிவர் இயற்றி அரங்கேற்றினார்.

1597 1675 சிவப்பிரகாசப் பெருந்திரட்டு சொரூபானந்த தேசிகரால் தொகுக்கப்பட்டது.

1602 1680 தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி முதலிய நூல்களை இயற்றிய தைரிய நாதர்

சாலிவா.	கி. பி.	
		என்று பெயருள்ள (Constantins Beschi) என்னும் ஐரோப்பியர் இத்தாலி தேசத்தில் நவம்பர் 8உ பிறந்தார்.
1634	1712	இராம நாடகம், அசோமுகி நாட்கம், சீகாழிப் புராணம், சீகாழிக்கோவை, அநுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூற்களை இயற்றிய அருணாசலக்கவிராயர் பிறந்தார்.
1647	1725	செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் சிவஞானசுவாமிகளால் இயற்றி அரங்கேற்றப்பட்டது.
1664	1742	தைரியநாதர் (Constantine Beschi) மணப் பாறை என்னும் ஊரில் இறந்தார்.
1690	1767	சுலோக பஞ்சகம், சிவதத்துவ விவேகம், காஞ்சிப் புராணத்தின் முற்பாகம் இவைகளைச் சிவஞான சுவாமிகள் மொழி பெயர்த்து அருளினர்.
1701	1779	அருணாசலக் கவிராயர் சீகாழியில் காலமானர்.
1707	1785	(விசுவாவசு) சிவஞான சுவாமிகள் சிவகதி பெற்றனர்.
1708	1786	உத்தர ராமாயணக் கீர்த்தனை, மருதூர் வெண்பா இயற்றிய அநந்த பாரதி ஐயங்கார் பிறந்தார்.
1712	1790	கச்சியப்ப முனிவர் சிவகதி பெற்றனர் (சாதாரண ஹு)
1746	1823	(சுபானு புரட்டாசி அக்டோபர் 5உ) திருவருட்பா இராமலிங்க சுவாமிகள் பிறந்தார்.

சாலிவா.	கி. பி.	
1745	Do	(சித்திரபானு மார்கழி 5வ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார்.
1748	1826	தாண்டவராய முதலியார் கதாமஞ்சரி இயற்றி வெளியிட்டார்.
Do	Do	பஞ்சதந்திரக் கதையை மராட்டிய பாஷையிலிருந்து முதன் முதல் தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்து வெளியிட்டார்.
1750	1828	தாண்டவராய முதலியார் இலக்கண வினவிடை இயற்றி வெளியிட்டார்.
1754	1832	செப்டம்பர் 12ம்வ ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை யவர்கள் (தமிழ் நூல்களை முதன்முதல் அச்சிட்டு வெளிப்படுத்தினவர்) பிறந்தார்கள்.
1758	1836	மாம்பழக்கவிராயர் பிறந்தார்.
1767	1845	ஆத்துமப்போதப் பிரகாசிகை இயற்றிய யாழ்ப்பாணத்துநல்லூர் சரவணமுத்துப் புலவர் இறந்தார்.
1767	1845	தியாகராசலீலை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களால் இயற்றப் பட்டது.
1769	1847	நவம்பர் திருவேங்கட அநுபூதி இராமநுஜக் கவிராயரால் இயற்றி வெளிப்படுத்தப் பட்டது.
1770	1848	இலக்கணச்சுருக்கம் ஷை கவிராயரால் இயற்றி அச்சிடப்பட்டது.
1768	1846	அநந்தபாரதி ஐயங்கார் காலமானார்.

காலக் குறிப்பு

சாலிவ.	கி. பி.	
1769	1847	கொன்றைவேந்தன் உரை இராமாநுஜக்கவிராயரால் இயற்றி அச்சிடப்பட்டது.
1772	1850	மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணவர் தேவராச பிள்ளையவர்களால் குசேலோபாக்கியானம் இயற்றப்பட்டு அரங்கேற்றப்பட்டது.
	Do.	வித்துவான் தாண்டவராய முதலியார் காலமானார்.
1782	1859-60	சீகாழிக்கோவையை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் இயற்றி சீகாழி பிரமபுரேசர் திருக்கோயில் வலம்புரிமண்டபத்தில் அரங்கேற்றினார்.
1782	1860	சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள் பிறந்தார்.
1793	1871	(பிரஜோற்பத்தி ஆனி) காஞ்சிபுரம் கோவை இராமசாமி நாயுடு காலமானார்.
1796	1874	(ஸ்ரீமுக தை) அருட்பா இராமலிங்க சுவாமிகள் ஐக்கியமாயினர்.
1802	1879	(பிரமாதி கார்த்திகை 21உ) ஆறுமுக நாவலரவர்கள் காலமானார்.
1803	1881	வீரசோழியம் ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை யவர்களால் முதன்முதல் அச்சியற்றப்பட்டது.
1806	1884	மாம்பழக்கவிராயர் காலமானார்.
1809	1887	(ஆடி) கலித்தொகை ஷை பிள்ளை யவர்களால் முதல்முதன் அச்சிடப்பட்டது.

சாலிவா.	கி. பி.	
1812	1889	(விரோதி-ஆடி) இலக்கணவிளக்கம் தாமோதரம் பிள்ளை யவர்களால் முதன்முதல் அச்சிடப்பட்டது.
	Do.	சூளாமணி ஷெயாரால் முதன்முதல் அச்சிடப்பட்டது.
1823	1900	(ஜனவரி 1வ) ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை யவர்கள் காலமானார்.
1828	1905	(குரோதி-தை) வித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை யவர்கள் காலமானார்.
1818	1895	(மன்மத ஆவணி) திருமயிலை வித்துவான் வெள்ளியம்பல உபாத்தியாயர் காலமானார்.
1817	1894	வித்துவான் சுப்பாராய செட்டியார் காலமானார்.
1584	1661	(பிப்ரவரி-சுபகிருது தை) ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள் சிவப்பேறடைந்தனர்.
1845	1922	சித்தாந்தபோத ரத்நாகரம் கா. ஆலால சுந்தரம் பிள்ளையவர்கள் காலமானார்.
Do.	Do.	சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் காலமாயினார்.

அமெரிக்காவில் உள்ள டாரெண்டோ என்னுமிடத்தில் மிஸ். ஷல்போர்டு என்னும் மாதுக்குப் பத்தடி நீளமுள்ள கூந்தல் இருக்கிறதாம். அதை நனைத்துச் சுத்தம் செய்து சீர்ப்படுத்த ஆறு மணி நேரம் பிடிக்கிறதாம்.

இங்கிலாந்தில் தற்சமயம் அழகிய கூந்தல் அதிகமாகத் தேவையிருக்கிறதாம் இதற்காக இதில் வியாபாரம் செய்யும் ஆட்கள் கிராமங்கள் தோறும் அழகிய கூந்தல்களையுடைய சிறுமிகளுக்கு ஏராளமாகப்பணம் கொடுத்துக் கூந்தல்களைக் கத்தரித்துப் போகிறார்களாம். லண்டன் மேற்குப்பாகததில் ஒரு வேலைக்காரச் சிறுமியின் கூந்தலுக்கு நூற்றைந்து பவுன் கொடுத்தார்களாம்.

சமண பாரதம்

(ஸ்ரீமான் மே. சக்கரவர்த்தி எழுதியது.)

முகவுரை.

நமது பண்டைய தேசீய வீரர்களின், வீர தீரச் செயல்களும் குணாதிசயப் பெருமைகளும் நன்கு விளக்கிக் கூறுவன பாரத, இராமாயண இதிகாசங்களாகும். இவ்விதிகாசங்களில் கூறப்படும் வீரபுருடர்களைப் பாராட்டாத சமயமே இல்லை யெனலாம். பாரத கண்டத்திலுள்ள எல்லாப் பாஷைகளிலும் இவ்வீரர்களின் சரித்திரத்தை இயல், இசை, நாடகம் என்னும் மூவகையால் பேர் பெற்ற வித்துவசிரோமணிகளால் நூல்கள் செய்யப்பட்டு யாவராலும எக்காலத்தும் போற்றி வாசிக்கப்பட்டு வருவதே இவர்களின் பெருமைக்குப் போதிய சான்றாய் விளங்குகிறது.

இங்ஙனம் பெருமை பெற்று விளங்கும் வீரர்களின் சரித்திரத்தைக் கூறும் நமது பண்டைய ஆசிரியர்கள் தங்கள் புத்திக்கும் யுக்திக்குந் தோன்றியவாறு சரித்திரப்போக்கை அமைத்துச் சென்றிருக்கின்றன ரென்பது பல பாஷைகளிலுள்ள பாரத ராமாயணங்களை ஆராய்வோர்க்குப் புலனாகும். உதாரணமாகப் பாரத மொன்றினை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் சமண சமயத்திலுள்ள பாரத சரித்திரத்திற்கும், வேறு சமயத்திலேயுள்ள பாரத சரித்திரத்திற்கும் மிக்க வேற்றுமை யிருப்பது தெரியும். சைவ வைணவர்களிலே வடமொழியில் வியாசர், ஜைமினி முதலியவர்களாலும், தென்மொழியில், பெருந்தேவனார் வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை முதலியவர்களாலும் பாரத வீரர்களின் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபோலவே சமணசமயத்திலும் பல ஆசிரியர்களால் இச்சரித்திரம் கூறப்பட்டிருப்பினும், சிறப்பாகத் தமிழ் நாட்டில் சமணர்களால் போற்றிப் பயில்வது வடமொழியிலுள்ள பாண்டு புராணம் என்பதாகும். இஃது பதினெட்டு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு மூவாயிரம் சுலோகங்களைக் கொண்டதா யிருக்கிறது. இதனை ஆக்கி யருளிய ஆசிரியர், ஸ்ரீபிரபாசந்திராசார்யருடைய மாணவர் ஸ்ரீவாதி சந்திராசார்ய ரென்னும் பெரியாராவர்.

இவர் கூறுகின்ற பாரத வீரர்களின் சரித்திரங்களும், முற் கூறிய மற்றையோர் கூறுகின்ற சரித்திரங்களும் எத்துணையோ அமிசங்களில் வேறுபடுகின்றன. சமண சமயத்தார், பாண்டவர் ஐவர்களிலே முதல் மூவராகிய தருமர், வீமன், அருச்சுனன் முதலியோர் முக்தி புருஷர்களாகவும் நகுலன் சகாதேவன் முதலியோர் தேவ புருஷர்களாகவும் கொள்ளப்படுகின்றனர். சமண சமயத்திலே இதைக் குறித்து 'பாண்டு சுதா திண்ணி ஜிணு'—என்று பிராகிருத சுலோக மொன்றுளது. இதன் பொருள் பாண்டு புத்திரர் மூவர் ஜிநராயின ரென்பதாம். இவர்கள் முத்தியடைந்த க்ஷேத்திரம் பாவிதாஞ சமஸ்தானத்திலேயுள்ள சத்ருஞ்சய என்னும் பெரிய திருமலையாகும். இம்மலைக்கு ஆயிரக்கணக்கான ஜைனர் ஒவ்வோராண்டும் யாத்திரை சென்று வருகின்றனர்.

இந்தப் பாரத வீரர்களின் சரித்திரம் சமண சமயத்திலே எவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதை யறிய இதிகாச ஆராய்ச்சியாளர்க்கு அவா வுண்டாகலாம். ஆனால் தமிழொன்றினையே பயின்றோர் அறிவதற்குத் தக்கபடி தமிழில் சமண சமயத்திலே பாரத வீரர்களின் சரித்திரமில்லை. முன் சொன்ன வடமொழியிலுள்ள பாண்டு புராணத்தைத் தழுவி தமிழும் சமஸ்கிருதங் கலந்த மணிப்பிரவாள நடையிலே ஒரு வசன நூலுண்டு. அந்நூலும் எடுத்தெழுதுவோராற் பிழைகள் மலிந்து சரித்திரத்தை எளிதில் அறிந்து கொள்வதற்கு இயலாம லிருக்கின்றது. சமணரிலே வடமொழியறிந்த புலவர்கள் இதுபோன்ற சரித்திரத்தை எழுதி வெளியிடுகின்ற காலையிலும், தங்களுக்கு இனிமையான மணிப்பிரவாள நடையையே பின்பற்றுகின்றனர்.

தமிழ் பயிலும் மாணவர்களும், சுத்த தமிழ்வசன நடையிலேயே சரித்திரத்தை யறிந்து இன்புற வேண்டுமென்ற தமிழறிஞர்களும், பிறமொழியிலுள்ள சரிதங்களைக் கூடியமட்டில் தமிழிலேயே எழுதுவதை விரும்புகின்றனர். இவ்விருப்பம் எம்மொழியாளர்க்கும் இயல்பே, இதநோக்கியே நானும் சமண சமயத்தில் கூறப்படும் பாரதக்கதையினைச் சுருக்கமாகத் தமிழில் எழுத முன் வந்தேன். இந்த எனது முயற்சியைத் தமிழ் நாட்டிலே நற்றொண்டாற்றிவரும் 'லக்ஷ்மி'யின் வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற துணிவு பற்றியே சரித்திரத்திற்குச் செல்கின்றேன்.

சமண பாரதம்

அத்தியாயம் 1.

சமணரல்லாத சமயத்தார் கூறும் பாரதம்.

ஜைனசமயம் அல்லது சமணசமய மென்றழைக்கப்படும் சமயத்திலே ஸ்ரீ விருஷபதீர்த்தங்கரர் முதல் ஸ்ரீ மஹாவீரர் ஈருகத் தீர்த்தங்கரர் இருபத்து நால்வரும் சமண சமயத்திலே கடவுள் என்று எண்ணத்தக்க வகையில் சேர்ந்தவர்கள். இவர்களுடைய ஒவ்வொரு அவதார காலத்துக்கிடையே பல்லாயிர மாண்டுகள் உண்டு. ஒரு தீர்த்தங்கரர் முத்தியடைந்து மற்றொரு தீர்த்தங்கரர் அவதரிக்கும் காலத்துக்கு இடையிலுள்ள காலத்தை, முத்தியடைந்த தீர்த்தங்கரர் காலமென்று சொல்லுவது சமண சமய மரபு. தீர்த்தங்கரர் இருபத்து நால்வருடைய காலங்களிலேயுள்ள அரசர்களின் சரித்திரத்தை அவ்வவ் தீர்த்தங்கர காலத்திய அரசர்களின் சரித மென்றழைப்பர் சமணர்.

இந்தப் பாரதவீரர்களின் சரித்திரம் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய ஸ்ரீ நேமிதீர்த்தங்கர சுவாமிகள் காலத்தில் நிகழ்ந்ததாகும். இச்சரித்திரத்தினை இற்றைக்குச் சுமார் இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த இருபத்து நான்காவது தீர்தங்கரராகிய ஸ்ரீ மஹாவீர வர்த்தமான சுவாமிகள், தீயகருமங்கள் கெடுத்து மேலான நிலையாகிய அருக பதவியை யடைந்து, அருள் வாக்கெனக் கூறும் பதினெண்பாஷையாய்ப் பிரியும் திவ்வியத்தொனியால் மக்கட்குத் திருவற மொழிகின்ற காலத்தே, திவ்வியத் தொனியை மொழி பெயர்த்து விளக்கிக்கூறும் கௌதம கணதரர்பால், மகத தேசத்தை யாண்ட சிரேணிக மகா மண்டலேச்வரனால் கேட்கப்பட்டதாகும்.

சிரேணிக மண்டலீகன் ஸ்ரீ மஹாவீரரைத் துதித்து, கௌதம கணதரரை நோக்கி, 'சுவாமி, பகவான் நேமிதீர்த்தங்கரர் காலத்தேயிருந்த பாண்டவவீரர்களின் சரித்திரத்தை அறிவதற்கு என்மனம் பெரிதும் விழைகின்றது. அவ்வீரர்களின் சரித்திரம் பலசமயத்தாராலும் பலவிதமாகக் கூறக் கேட்டிருக்கின்றேன். இக்கேள்வியால் அவர்களின் உண்மை வரலாறு அறியக்கூடவில்லை. தங்கள் முகத்தால் உண்மை அறிய விரும்புகின்றேன். சுவாமிகள் அடியேனுக்கு அவர்களுடைய வரலாறு முழுதும் உரைத்தருளப் பிரார்த்திக்கின்றேன் என்று வேண்டிக் கொண்டனன். கௌதம

கணதரர், 'நீ பாண்டவ வீரர்களின் சரித்திரம் எவ்வாறு அறிந்திருக்கிறாய்' என, சிரேணிகமன்னன் தான் அறிந்தவாறு கூறுகின்றான்.

* குருவமிசத்தில் கீர்த்தி பெற்றவன் சாந்தனன் என்பான். அவன் ஒருநாள் நாடு பிடிக்கும் நிமித்தம் பரதேசஞ் சென்றிருந்தான். அதுபொழுது அவனுடைய பட்டத்தரசி பூப்படைந்து, நான்காம் நாள் குளித்துப் புத்திர சந்தான மடைவதற்கான அருகதை யுடையவளா யிருந்தாள். இது செய்தியைப் பரதேசஞ் சென்றிருக்கும் கணவனுக்கு அறிவிப்பான் வேண்டி அரசி, ஒரு புறாவின் கழுத்தில் நிருபம் ஒன்று எழுதிக் கட்டி ஆகாயத்தில் விட்டனள். அப்புறா ஆகாயத்தே பறந்து சென்று சேனு சமுத்திரங்களுக்கிடையே தங்கியிருக்கும் சாந்தன அரசனையடைந்து நிருபத்தைக் காட்டிற்று. அரசன், அரசியின் நிருப வசனங்களையும், பருவமடைந்ததையும் அறிந்ததும் காமபரவசத்த ஞனன். அதனல் அவனுடைய விந்து வெளிப்பட்டது. அதனை வீணாக்காது அரசியிடத்திற் சேர்க்கக் கருதி ஒரு பாத்திரத்திலிட்டுப் புறாவின் கழுத்தில் மாட்டி ஆகாயத்தே விட்டனன். அப்புறா தேச தேசாந்தரங்களைக் கடந்து கங்கா நதி மத்தியில் பறந்து வருகின்ற பொழுது ஆண்டு பறந்து கொண்டிருந்த வேறொரு பறவை அதனுடன் சண்டை யிட்டது. அதனல் புறாவின் கழுத்தில் மாட்டியிருந்த பாத்திரத்திலுள்ள விந்து கவிழ்ந்து நதி தீரத்தில் விழுந்தது. அவ்விந்தை ஒரு மச்சம் உண்டது. அம்மச்சம் அவ்விந்தின் விசேடத்தால் கருப்பமுற்று நதியில் உலாவுகின்ற பொழுது ஒரு வலைஞன் வலையில் சிக்கிக் கொண்டது. வலைஞன் அம்மச்சத்தைச் சேதிக்க அதில் நல்ல அழகுள்ள ஒரு பெண் மகவு வெளிப்பட்டது. அம்மகவை மச்சத்தினின்றும் பெற்றதால் வலைஞன் மச்சகந்தி என்னும் நாமம் வைத்து அன்புடன் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தான். அம்மகவு மச்சத்தினின்றும் பிறந்தமையால் மச்சத்தினிடம் பொருந்திய புலால் நாற்றம் அம்மகவினிடமு மிருந்தது. மச்சகந்தி வலைஞன் ஆதரவில் வளர்ந்து யௌவனளாயினள். வலைஞன் தன்குலத் தொழிற்படி மச்சகந்தியைக் கங்கா நதியில் படகோட்டும் பணியில் வைத்தனன்.

---

* இது முதல் பாண்டு புராணத்தைத் தழுவி எழுதப்படுகிறது. பாண்டு புராணம் சமஸ்கிருதபாஷையிலுள்ளது.

மச்சகந்தி தனது தொழிலைச் செவ்வனே செய்து வருகின்ற பொழுது ஒருநாள்,பராசரமுனிவர் என்பார் கங்காநதிபக்கம் வந்தார். வந்தவர் அங்கே படகோட்டும் வடிவழகியாகிய மச்சகந்தியைப் பார்த்ததும், அவருக்கு மதனுவத்தை மேலிட்டது. அதனல் அவர் மச்சகந்தியைப் பல சாகசங்களால் மயக்கி, அவளுக்குப் பொருந்தியிருந்த மச்ச நாற்றத்தைப் போக்கிச் சுகந்த முண்டாக்கி தம்மைச் சுற்றிலும் புகைபோன்ற பனிசூழச் செய்து நதி மத்தியில் தன்னிச்சையைப் பூர்த்தி செய்து கொண்டார். இருடிபிண்டம் இராத்தங்காது, என்னும் மொழிக் கேற்கவே அவளும் கர்ப்பவதியாகி ஒரு ஆண் குழவியை ஈன்றனள். அக்குழவி வேதவியாசரென்னும் பெயரைத் தாங்கி, தன் தந்தை பக்கலடைந்து இருடியாசிரமம் பெற்றது. மச்சகந்தியும் முனிவர் மகிமையால் பரிமளகந்தியாக மாறினள்.

ஈதிங்ஙனமாக, நாடுபிடிக்கும் காரணமாக வெளியே சென்றிருந்த சாந்தனன், தன் நாட்டை நோக்கி வருகின்றபோது, கங்காநதி தீரத்தில் படகோட்டும் பணி செய்யும் பரிமள கந்தியாகிய மச்சகந்தியைப் பார்த்து மோகித்து, அவளை விவாகஞ் செய்யக் கருதி அவளுடைய தந்தையின் சம்மதத்தைக் கேட்டனன். அவன், 'நினக்குக் காங்கேயன் என்னும் புத்திரன் ஒருவனிருக்கின்றான். உனக்குப் பின் அவனே அரசுக்கு உரிமையுடையவன். என்மகளுக்குப் பிறக்கும் மக்கள் உன் மூத்தபுத்திரனுக்குச் சேவகந்தானே செய்யவேண்டும். இத்தகைய இழிநிலைமைக்குப் பாத்திரமாகும்படி என் பெண்ணைக் கொடேன்' என்றான். சாந்தனன் அம்மச்சகந்தியை அடைய முடியாததற்கு வருந்தி, காங்கேயனுக்குத் தன் விழைவைத் தெரிவித்தான். காங்கேயன் தந்தை விருப்பத்தை நிறைவேற்ற வலைஞனையடைந்து தான் அரசபட்டத்தை எற்றுக் கொள்வதில்லை யென்று உறுதி கூறினன். வலைஞன், 'நீ அதனை விரும்பாவிடினும், நினக்குப் பிறக்கும் புத்திரர்கள் அபகரிப்பார்களே' யெனக் காங்கேயன், தன் இலிங்கத்தைச் சேதித்து, இனி நான் விவாகமே செய்து கொள்வதில்லையென பீஷ்ம விரதமேற் கொண்டனன். இதனல் அவனுக்கு அன்று முதல் பீஷ்மன் என்னும் பெயருண்டாயிற்று.

காங்கேயன் இத்தகையதான பீஷ்ம விரதத்தைக் கொண்டதும் வலைஞன் மச்சகந்தியை மன்னன் சாந்தனனுக்கு விவாக விதியாற் கொடுத்தனன். சாந்தனன் அவளுடன் இன்பந்துய்த்துத

தனது முதல் மனைவியாகிய கங்கையைப் பராமுகஞ் செய்தான். கங்கை அதற்குப் பொருமல் தன் தாயகஞ் சென்ருள்.

சாந்தனன் மச்சகந்தியுடன் சுகித்திருக்கின்ற காலத்தே அவளிடமாக சித்திரவீரியன், விசித்திரவீரியன் என்னும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் குமாரகாலப் பருவத்தை எய்தியதும், சாந்தனன் தன் கௌமார பருவத்தையும் ஆயுள் முடிவையும் அறிந்து, அப்புத்திரர்களுக்கு முறையே அரசபட்டத்தையும் இளவரச பட்டத்தையுங் கட்டுவித்துப் பின்பு மரணமடைந்தான். சித்திர விசித்திர வீரியர்கள் அரசாளுகையில், தங்களுக்கு மூத்த சகோதரனாய் விளங்கும் காங்கேயன் தங்கள் தாயின் பொருட்டு பீஷ்ம விரத மேற்கொண்டதையும், தாங்கள் அப்பாபகாரியத்திற்கு ஆளாகி யிருப்பதையும் மந்திரிகள்பால் உணர்ந்து வருந்தி,பாப நிவர்த்திக்காக அக்கினி குண்டம் வளர்த்தி அதில் வீழ்ந்திறந்தார்கள்.

அவர்களுக்குப் பின் நாட்டை ஆள்வதற்கு அரசரில்லாமற் போகவே மச்சகந்தி மந்திரிகளுடன் ஆலோசித்து, தன் முதல் புத்திரனுகிய வேத வியாசனைக் கொண்டு சித்திர விசித்திர வீரர்களுடைய பத்தினிகளுக்குப் புத்திர சந்தான முண்டாகத் தீர்மானித்தாள். தீர்மானப்படி வேத வியாசனை யழைத்து அவன் முன் சித்திரனுடைய மனைவியை யனுப்ப,அவள் நாணத்துடன் தன்னிரு கண்களைப் பொத்திக் கொண்டு சென்ருள். வியாசன், அவளது இத்தகைய செய்கை காரணமாக அவளுக்கு அந்தகனுக வுடைய புத்திரன் பிறப்பானென்று கூறிப் புத்திரோற்பத்தி செய்தான். அவ்வாறே அவளுக்கு இருகண்களும் குருடான திருதராட்டிரனென்னும் பிள்ளை பிறந்தான். விசித்திர வீரியனுடைய மனைவி தேக முழுதும் சந்தனத்தைப் பூசிக்கொண்டு வியாசன் முன் வந்தாள். வியாசன், உனக்குக் குஷ்டரோக முடைய பிள்ளை பிறப்பானென்று கூறிப் புத்திரோற்பத்தி செய்தான். அவ்வண்ணமே அவளுக்கு வெண்குஷ்ட முடைய பாண்டு வென்னும் புத்திரன் ஜனித்தான். இவ்விருவர்களுக்குப் பின் விசித்திர வீரியனுடைய போக பத்தினி வந்தாள். அவள் முகவிலாசத்துடன் சல்லாபஞ் செய்ய, வியாசன் உனக்கு நல்ல அழகும் ஞானமுடைய புத்திரன் பிறப்பானென்றனன். அப்படியே அவளுக்கு உருவும் திருவுமுடைய விதுரன் என்னும் குமாரன் பிறந்தான்.

வேதவியாசன், புத்திரர் மூவருள்ளே அந்தகனுகிய திருதராட்டிரனுக்கு அரச பட்டங்கட்டி ஆரணியமேகினன். திருதராட்டிரனுக்குக் காந்தாரி என்பவள் மனைவியாக வாய்த்திருந்தாள். அவளுக்குச் சாதகம் கணிப்போர், 'காந்தாரிக்குக் கணவன்மார் நூற்றுவர் வரை இறந்தொழிவர்; நூற்றேராவது கணவனே நிலைப்பா'னென்றனர். காந்தாரியின் தந்தை அதற்குப் பரிகாரமாக நூறுகழுதைகளை விவாகஞ் செய்து நூற்றேராவதாகத் திருதராட்டிரனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். காந்தாரி, புத்திர நிமித்தம் திருதராட்டிரனல்லாமல் நூறு ஆட்டுக் கடாக்களையும் நேசித்து வந்தாள். திருதராட்டிரன் இஃதறிந்து அக்கடாக்களைத் தான் இயற்றிய யாகத்தில் பலியிட்டு விட்டான். அக்கடாக்கள் தேவலோகத்தை யடைந்து தேவர்களாகிப் பூர்வ சிநேகத்தால் காந்தாரி மனையடைந்து அவளுடன் இன்பந்துய்த்துக் கொண்டிருக்க அவள் கர்ப்பமடைந்தாள். அக்கர்ப்பம் ஆறுமாதத்திலேயே சேதமாய்விட காந்தாரி அவைகளை நூறு துண்டுகளாக்கி மிருதுவான பஞ்சணையில் கிடத்திக் காப்பாற்றிக் கொண்டுவந்தாள். அவைகள் ஒன்பது மாதங் கடந்தபின் துரியோதனுதி புத்திரர்கள் நூற்றுவர் பிறந்தனர்.

இவை மற்ற சமயங்களில் கூறப் படும் பாரத வரலாறுகும். 'சுவாமி, இவ்வரலாற்றேடு, குந்தி கன்னிப்பருவத்தினளாயிருந்த போது சூரியன் சம்பந்தத்தால் கர்ணனைப் பெற்றுளென்றும், பின்பு பாண்டு குந்தி, மத்திரி முதலிய மாதர்களை விவாகஞ் செய்து கொண்டானென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. பாண்டு மத்திரியோடு வேட்டையின் நிமித்தம் வனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், ஒரு நாள் இருடியொருவர் தன் பத்தினியோடு மான வடிவாகிச் சுகித்துக் கொண்டிருந்தார்; அம்மான் தம்பதிகள் இருடிகளென அறியாத பாண்டு அவர்களின்மேல் அம்புவிட்டு அவர்களை அடித்தான். மான் ரூபத்தோடிருந்த இருடிகள் உண்மையான உருவெடுத்துப் பாண்டுவைப் பார்த்து, 'நீ உன்னுடைய மனைவியை அணைந்தால் மரணமடைவாய்' என்று சாபங் கொடுத்தார்கள்.

பாண்டு தான் ஆராயாமல் செய்த தவறுக்காக வருந்தி அது முதல் மனைவியரோடு சுகித்தலை யொழித்தான். குந்திவமிச விருத்திக்காகத் தான் பெற்றிருந்த மந்திர பலத்தால் தருமன், வாயு, இந்திரன் முதலியவர்களின் உதவியைக் கொண்டு முறையே தரும

புத்திரன், வீமன், அருச்சுனன் முதலியவர்களைப் பெற்றாள். மத்திரியும் குந்தியைப் போலவே மந்திரபலத்தால் நகுல சகாதேவர்களைப் பெற்றாள். இங்ஙனமாகப் பாண்டவர்களின் உற்பத்தி கூறப்படுகிறது; இவ்வைவருக்கும் திரௌபதை பத்தினி யென்றும் சொல்லப்படுகிறது.

இதிலிருந்து புரூ வீரியம் எடுத்துச் சென்றதும், அது கங்கையில் விழ மீன் புசித்துக் கர்ப்பமுற்றுக் கன்னிகை ஈன்றதும், அக்கன்னியைத் தவமேற்கொண்ட பராசரன் அணைந்ததும், அவர்களுக்கு வேதவியாசன் பிறந்ததும், வியாசன் சித்திர விசித்திர வீரியர்களது மனைவிகளின் பால் புத்திரோற்பத்தி யுண்டாக்கியதும், காந்தாரி நூறு ஆட்டுக்கடாக்களோடு நேசித்தொழுகியதும், அவைகள் யாகத்தில் மரித்துத் தேவர்களானதும், பின்னரும் அத்தேவர்கள் காந்தாரியின்பால் களவொழுக்கங் கொள்வதும், புத்திராகள் நூற்றுவர் அதிசயமான முறையில் பிறப்பதும், பாண்டவர்கள் உற்பத்திக் கிரமமும், அவர்களுக்குத் திரௌபதை யென்பாள் மனைவியாவதுமான வரலாறுகள் புலப்படுகின்றன. இவையாவும் ஆச்சரியத்தைத் தரத்தக்கதாயும், சந்தேகங்களை விளைவிக்கக் கூடியதாயுமிருக்கின்றன. இச்சரித்திரம் இன்னும் பலவிதமாகவும் பலராலும் சொல்லப்படுகிறது. உத்தமமான குருவம்சத்திற்குக் களங்கத்தைத்தரும் இத்தகைய வரலாறுகளை நான் கேட்கின்றமையால், சுவாமிகள் பாரதவீரர்களின் உண்மையான வரலாறுகளை, சர்வக்ஞ முக கமலங்களி லிருந்து பிறந்த திவ்விய பாஷையில் எப்படி உண்மை வெளிப்பட்டதோ அப்படியே அடியேனுக்கு உரைத்தருள வேண்டுமென்று மகததேசாதிபதியாகிய சிரேணிக மகாராஜன் கௌதம கணதரரைப் பிரார்த்தித்துக் கொண்டான். கௌதமகணதரரும் பகவான் வாக்கிலிருந்து பிறந்தவாறு பாரத வீரர்களின் சரித்திரம் சொல்லுவதானார்.

(தொடரும்)

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரு விதமான சிலந்திப் பூச்சிகள் இருக்கின்றனவாம். அவைகள் மஞ்சள் நிறமான கூடுகளை நூலினால் கட்டுகின்றனவாம். அதில் பெரிய பறவைகளும், ஓணான் முதலிய ஜந்துக்களும் அகப்பட்டுக்கொண்டு சிக்கி விடுகின்றனவாம். கூடுகள் அவ்வளவு பலமுள்ளனவாம். அந்த சிலந்திப் பூச்சிகள் அரை அடி நீளம் உள்ளனவாம்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்

3-ம் அத்தியாயம்

மலைக்குகையில் மறைந் தொளிதல்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

நட்டாஜி அன்றிரவு மெய்ம்மறந்து உறங்கிக் கொண்டிருக்க அவன் பெற்றோர் சிறிதும் கண்ணுறங்கவில்லை. எப்படி உறங்க முடியும். தங்கள் பெண்ணைப் பறிகொடுத்த அவர்களுக்குத் தூக்கமும் உண்டோ? அவர்கள் அன்றிரவெல்லாம் நட்டாஜியைப் பற்றியே மிகுந்த கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தார்கள். நட்டாஜி இன்னும் உயிருடன் வாழ்கிறான் என்று அதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டால், இராணுவத் தலைவனைக் கொன்றுவிட்ட குற்றத்திற்காக நட்டாஜி மரண தண்டனை அடைவது நிச்சயம். தடையின்றி அவன் "ஒரு கொலையாளி" என்று காரணமில்லாமலே பழி சுமத்தப்படுவான். தாங்கள் அமைதியாக ஊர்வலஞ் சென்றதைத் தடைப் படுத்தியது சிப்பாய்கள் தானென்றும், அநியாயமாகத் தங்களைத் தாக்கிக் கலகம் விளைத்ததும் அவர்கள்தா னென்றும் பீஜப்பூர் அரசாங்க அதிகாரிகளிடம் மனுசெய்து கொள்வது முழுதும் பயனற்ற காரியம். ஏனென்றால், சிப்பாய்களாவது இராணுவ உத்தியோகஸ்தர்களாவது எத்தகைய பெரிய குற்றங்களைச் செய்தாலும் அதுபற்றி அவர்களைத் தண்டிக்காமல், தங்களால் ஆளப்படும் ஏழைக் குடிமக்கள் ஏதேனும் ஒரு சிறு குற்றஞ் செய்து விட்டால் அதுவே மிகப் பெரிய குற்றமென்றும் ராஜத்துரோக மென்றும் எண்ணி பெரிய தண்டனைகளை விதிப்பது அரசாங்கத்தின் நியாயமாக இருந்தது. ஆகவே நட்டாஜி தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு சேனைத் தலைவனையும் இரண்டொரு சிப்பாய்களையும் கொன்று போட்டது எல்லாக் குற்றங்களிலும் மன்னிக்கப்படாத பெருங்குற்றமென்று நிச்சயித்து அதிகாரிகள் அவனுக்குச் சிரச்சேத தண்டனையை விதிப்பார்களென்று உள்ளங்கனி நெல்லிக்கனிபோல் விளங்கிற்று. நட்டாஜியின் பெற்றோர் இதைப்பற்றி எல்லாம்

அன்றிரவு முழுவதும் யோசித்தார்கள். அந்தோ! ஒரு பெண்ணைப் பறிகொடுத்து வாடி வருந்தும் பெற்றோர்கள், தங்கள் மகனுக்கு அதிகாரிகள் கொலைத் தண்டனை விதிப்பார்கள் என்று நினைத்த போது அவர்கள் மனம் என்ன பாடுபட்டது! பெற்றோரின் அன்புக்கு அளவும் உண்டோ? "நட்டாஜி ஆபத்தின்றி உயிருடன் வாழ வேண்டுமானால் அவன் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்து வாழவேண்டும். அவன் உயிருடன் இருக்கிறான் என்று ஒருவருக்கும் தெரியக் கூடாது. அவன் சிப்பாய்களால் கொல்லப்பட்டு இறந்துபோய் விட்டான் என்றே எல்லோரையும் நினைக்கும்படிச் செய்ய வேண்டும். பொழுது விடிந்து விட்டால் கிராமத்தாரில் யாரேனும் அவனைப் பார்த்து விடக்கூடும். ஆகையினால், பொழுது புலர்வதற்கு முன்னமேயே யாருமறியாத ஒரு மறைவிடத்தில் நட்டாஜியை ஒளித்து வைக்கவேண்டும்." என்று அவர்கள் யோசித்து முடிவு செய்தார்கள்.

நட்டாஜியை எவ்விடத்தில் மறைத்து வைப்பது? யாருடைய பார்வையில் விட்டுவைப்பது? அவன் வசிக்கும் இடம் ஒருவரும் செல்லக்கூடாத இடமாயிருக்க வேண்டுமே என்று அவர்கள் மேலும் சிந்தித்தார்கள். நெடுநேரம் இவ்வாறு அவர்கள் ஆழ்ந்து யோசித்த போது கடைசியாக அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த யோசனை மிகுந்த திருப்திகரமாக விருந்தபடியால் அவ்விதமே செய்ய வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார்கள். அவர்களின் சுற்றத்தாரில் ஒருவர் ராணுவத்தில் சேர்ந்து சிப்பாயாக விருந்தார். அவர் அக்காலத்தில் அடிக்கடி நடந்த பல போர்களில் தைரியத்துடன் சண்டை செய்திருக்கிறார். பிறகு, அவர் சிப்பாய் தொழிலை விட்டு விட்டு, இந்தியாவிலுள்ள முக்கியமான புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று கடைசியாக சன்னியாசம் பெற்றுக் கொண்டார். சன்னியாசம் பெற்ற அவர் "போகானந்தர்" என்னும் பெயருடன் சௌக் கிராமத்திற்கு வடக்கே சுற்று தூரத்திலுள்ள மேதாரம் என்னும் மலையுச்சியில் சென்று அங்குள்ள ஒரு குகையில் தனியே வாசம் செய்து கொண்டிருக்கிறார். இவரிடத்தில் தான் நட்டாஜியை அனுப்பிவைக்க அப்பெற்றோர்கள் முடிவு செய்தார்கள்.

இவர்கள் இந்த முடிவுக்கு வந்தபோது இரவு மூன்றரை அல்லது நான்கு மணியிருக்கும். வைகறைப் பொழுது என்பதைத்

தெரிவிப்பது போல் முதல் கோழி குரலெடுத்துக் கூவியது. இனி தாமதப்படுத்தக் கூடாது என்று பெற்றோர்கள், களைப்பினால் அயர்ந்து உறங்கும் நட்டாஜியை எழுப்பினார்கள். அவன் விழித்துக் கொண்டு கண்களை கையினால் தேய்த்துக் கொண்டே "கங்காபாய் வந்து விட்டாளா?" என்று ஆவலோடு வினவினான். அவர்கள் மிகுந்த துக்கத்துடன் "மகனே! அவள் இன்னும் வரவில்லை அவளைத் தேடிச் சென்றவர்களும் இன்னும் திரும்பிவரவில்லை" என்று பதில் சொல்லும்போது அவர்கள் கண்களில் நீர்வடிந்தது.

பிறகு, அவர்கள் இனி அவனுக்கு நேரிடக்கூடிய ஆபத்துக்களைப்பற்றி அவனுக்கு விபரமாகச் சொன்னார்கள். உடனே புறப்பட்டு மலைக்குகைக்குச் செல்லவேண்டும் என்றும், அங்கு வசிக்கும் யோகானந்தரைத் தவிர எனையோரிடம் தான் இன்னான் என்பதைத் தெரிவிக்கக் கூடாதென்றும் அவனுக்குத் திட்டமாகச் சொன்னார்கள்.

அதற்கு அவன், "நீங்கள் என் பயப்பட வேண்டும்? முகம்மதிய உத்தியோகஸ்தர்களுக்காவது அவர்கள் தண்டனைக்காவது நான் பயப்படுகிறவன் அல்ல. வருகிறது வரட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று தன் இளவயதின் இயற்கைக்கு ஏற்ப நட்டாஜி பதில் சொன்னான்.

அவ்விதம் பேசுவது சரியல்லவென்றும் தங்கள் யோசனைப்படி செய்வதுதான் நல்லதென்றும் கங்காபாயை இழந்து வருந்தும் தங்களுக்கு அவன் ஒரு பெரிய ஆறுதலாக விருக்கிறதையும் அவனுக்கு ஆபத்து நேர்ந்தால் தங்களுக்கு உண்டாகும் துக்கத்தையும் அவன் பெற்றோர்கள் அவனுக்கு எடுத்துக் காட்டிச் சொல்லிய போது அவன் தன் பெற்றோர் விருப்பப்படி மலையுச்சிக்குப் போகச் சம்மதித்தான்.

அவன் உடம்பில் பல காயங்கள் உண்டாகி பலங் குறைந்திருந்தபடியால் அவன் பெற்றோர்கள் அவனைத் தனியே மலைக்குகைக்கு அனுப்ப அஞ்சினார்கள், யசாஜி என்னும் தங்கள் வேலைக்காரனை அவனுடன் துணை போகும்படி அனுப்பினார்கள். யசாஜி நன்றியறிவுள்ள நம்பிக்கையான வேலைக்காரன். நெடுநாளாக அந்த குடும்பத்தில் சிறுவயது முதல் வேலை செய்து வருகிறவன். அந்தக் குடும்பத்தார் எல்லோரிடத்திலும் அவனுக்கு மிகுந்த அன்பு உண்டு. கங்காபாய் சிப்பாய்களால் கவர்ந்து போகப்பட்ட செய்தியைக்

கேட்டு அவன் கண்ணீர்விட்டுக் கதறிக் கதறி யழுததைக் கண்டவருக்குத் தான், அக்குடும்பத்தாரிடத்தில் அவனுக்கு எவ்வளவு அன்பிருக்கிறது என்பது விளங்கும். இத்தகைய உண்மையாளனாகிய யசாஜியை அவர்கள் நட்டாஜிக்குத் துணை அனுப்பினார்கள். நட்டாஜி தனது பெற்றோரையும் சினேகிதர்களையும் விட்டுப் போவதற்காக மிகுந்த வருத்தப்பட்டான். கடைசியாக தனது பெற்றோரை வணங்கி விடைபெற்றுக் கொண்டான். பெற்றோர்கள் அவனை மிகுந்த அன்புடன் வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினார்கள். மிகுந்த துக்கத்துடன் நட்டாஜி, யசாஜியுடன் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

இருவரும் மேதார மலைக்குச் செல்லும் பெரும்பாதை வழியே நடந்தார்கள். அவ் வைகறைப்போதில் குளிர்ந்த காற்று மெல்ல வீசியது. கிழக்கு சிறிது வெளுத்துக்காட்டிற்று. வானத்தில் வைரக்கற்கள் போல் ஒளிவிட்டு விளங்கும் விண்மீன்கள் ஒளிமழுங்கி ஒவ்வொன்றாய் மறைந்து கொண்டிருந்தன. மரங்களில் துயில்விட்டெழுந்த பறவைகள் இனிமையாகப் பாடும் ஓசை, கேட்பவர் உள்ளத்தைக் களிக்கச் செய்தன. நட்டாஜி, யசாஜி இருவரும் இக்காலை வேளையின் இயற்கை யழகைக் கவனியாமலே ஏதோ யோசித்த வண்ணம் நடந்தார்கள். கிராமத்தில் வீடுகள் எல்லாம் இன்னும் சாத்தப்பட்டிருந்தன. அவர்கள் சென்றதை ஒருவரும் பார்க்கவில்லை. அவர்கள் கிராமத்தை விட்டு பாதைவழியே நெடுநேரம் நடந்தனர். நட்டாஜி, தன் சகோதரியைப்பற்றிச் சிந்தித்த வண்ணம் நடந்தான். பீஜப்பூர் சிப்பாய்கள் நடந்து கொண்ட மாதிரியும், தன் சகோதரியைக் கவர்ந்து கொண்டு போய்விட்ட விஷயமும் அவன் மனத்தைக் கத்திபோல் அறுத்தன. அவன் பழியை வாங்க வேண்டும் என்றும் இக்கொடிய காரியங்களை யெல்லாம் கவனிக்காமலே யிருந்து வரும் பீஜப்பூர் அரசாட்சியைத் தொலைக்க வேண்டும் என்றும் உறுதி கொண்டான். இப்படி பற்பலவாறு சிந்தித்த வண்ணம் நெடுந்தூரம் சென்றபோது சூரியன் கிழக்கில் புறப்பட்டான். எங்கும் படர்ந்திருந்த இருள் மறைந்து சூரிய வெளிச்சத்தில் மரங்கள் செடிகள் முதலிய எல்லாப் பொருள்களும் அழகாகத் தோன்றின. கடைசியாக அவர்கள் உன்னதமாகக் கம்பீரத்துடன் தோன்றும் மேதாரம் என்னும் மலை யடிவாரத்தை யடைந்தனர். அடிவாரத்திற்கும் மலையுச்சிக்கும் சுமார் இரண்டாயிரம் அடி உயரம் இருக்கலாம். உச்சிக்குச் செல்ல பாறைகள் இயற்கையாகவே படி

களைப்போல் அமைந்திருக்கின்றன. இயற்கையா யமைந்துள்ள இப் படிகள் வழியாகத் தான் ஏறிப் போவதும் இறங்கி வருவதும் வழக்கம். நட்டாஜியும் யசாஜியும் இப்படிகளின் வழியே ஏறிச் சென்றார்கள். ஏற்கனவே காயங்களால் பலவீனப்பட்டிருந்த நட்டாஜி நெடுந்தூரம் நடந்துவந்தபடியால் அதிகமாகக் களைப்படைந்திருந்தான். அதையும் பொருட்படுத்தாமல் படிகள்வழியே ஏறிச் சென்றான். சற்றேறக்குறைய நூறடிகள் ஏறியிருப்பான். அப்போது அவன் கால்கள் வலித்தன. ஆகவே அவன் மேலும் ஏற முடியாமல் கற்பாறைமீது உட்கார்ந்து “சற்று இளைப்பாறிய பின் நடக்கலாம்” என்று சொன்னான். “சோர்வுற்றிருக்கும் நட்டாஜி இவ்வளவு படிகளையும் எப்படிக் கடந்து ஏறப்போகிறான் ?” என்று யசாஜி தனக்குள் யோசித்த வண்ணமிருந்தான்.

இவர்கள் இவ்வாறு கற்பாறைகளின் மேல் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது நாகரிகமற்ற முரட்டு மனிதர் சிலர் அவ்விடம் காணப்பட்டனர். அவர்கள் நேரே மலையடிவாரத்தை யடைந்து படிகளின் மீது ஏறிவருவதைக் கண்ட யசாஜி “கொள்ளைக் கூட்டத்தார் வருகிறார்கள்” என்று நட்டாஜிக்குச் சொன்னான்.

“அப்படியிருக்காது. வழிப்போக்கர் போல் காணப்படுகிறது. அருகில் வரட்டும் பார்ப்போம்” என்று சொல்லி நட்டாஜி அவர்களைக் கூர்ந்து கவனித்தான். அருகில் வந்தபோது அவர்கள் அம்மலையுச்சியில் வசிக்கும் ‘தக்கர்’ என்னும் முரட்டுச்சாதியார் என்று தெரிந்தது. அவர்கள் அந்த மலையுச்சியிலே வசிப்பவர்கள். அவர்கள் ஏதோ காரியமாக வெளியிற் சென்றவர்கள் இப்போது திரும்பி மலையுச்சிக்குப் போகிறார்கள். அவர்கள் அருகில் வந்த உடன் யசாஜி அவர்களை விளித்துக் கூப்பிட்டு “எங்கே போகிறீர்கள் ?” என்று கேட்டான்.

அவர்கள் மலையுச்சிக்குப் போவதாக விடையளித்தபோது, தாங்களும் மலையுச்சிக்குப் போகவேண்டும் என்றும் நட்டாஜி அதிகமாகக் களைப்படைந்திருப்பதால் அவனை மலையுச்சிக்கு அழைத்துக்கொண்டுபோக உதவி செய்யக் கூடுமா என்றும் யசாஜி அவர்களைக் கேட்டான்.

அவர்கள் “காசு கொடுத்தால் உதவி செய்கிறோம்” என்றார்கள்.

யசாஜி, காசு கொடுப்பதாகவும் தங்களை யோகானந்த சுவாமிகள் வசிக்குமிடத்தில் கொண்டு போய்விட வேண்டும் என்றும் சொன்னான்.

இவர்கள் சன்னியாசியிடம் போகிறார்கள் என்று அவர்கள் அறிந்த உடன், "சுவாமிஜியிடம் செல்வதாயிருந்தால் இலவசமாகவே அழைத்துக்கொண்டு போகிறோம்; எங்களுக்கு ஒருபைசாவும் வேண்டியதில்லை" என்று அவர்கள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். மலையுச்சியில் புலிக்குகையில் வசிக்கும் யோகானந்த சுவாமிகளிடம் அவர்களுக்கு மிகுந்த அன்பும் அபிமானமுமிருந்தபடியால், அவரிடம் செல்கிறவர்களிடத்திலிருந்து கூட அவர்கள் கூலி பெறச் சம்மதிக்கவில்லை. யோகானந்தரிடம் இந்த முரட்டுச் சனங்கள் கொண்டுள்ள பக்தி விஸ்வாசத்தைக் கண்டு நட்டாஜியும் யசாஜியும் தமக்குள் மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள்.

உடனே அந்த வழிப்போக்கர் அருகிலிருந்த மரத்திலிருந்து உறுதியான நீண்ட இரண்டுகழிகளை வெட்டிக்கொண்டு வந்து அவற்றின்மீது தங்களிடமிருந்த கம்பளியைப் பரப்பி "டோலி" ஒன்று செய்தார்கள். அதன் மேல் நட்டாஜியை உட்காரவைத்து டோலியைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தார்கள். யசாஜி அவர்களுடன் நடந்து சென்றான். படிகளின்மேல் ஏறிப்போவதைவிட ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்றால் சீக்கிரமாகப் போய்ச் சேரலாம் என்று தோன்றியபடியால் ஒற்றையடிப்பாதை வழியே நடந்தார்கள். மலையுச்சிக்குச் செல்லும் பல வழிகளையும் அவர்கள் நன்கறிந்தவர்களாகையால் சிறிது நேரத்திற்குள் மலையுச்சியையடைந்து முனிவர் வசிக்கும் மலைக்குகையைச் சேர்ந்தார்கள். யோகானந்த சுவாமிகளிடத்தில் அவர்களை விட்டுவிட்டு அந்த முரட்டுமனிதர் தங்கள் வீடுநோக்கிச் சென்றார்கள். தம்மைத் தேடி வந்த நட்டாஜி, யசாஜி இருவரையும் யோகானந்தர் மிகுந்த அன்புடன் வரவேற்றார்.

அந்தக் குகை ஒரு அறைபோலிருந்தது. அதன் தரை காடுமுரடான கற்களால் அமைந்திருந்தது. ஒரு மூலையில் செம்புப் பாத்திரம் முதலியன சுவாமிக்கு இன்றியமையாது வேண்டப்படும் சில சாமான்களைத் தவிர வேறு ஒரு பொருளும் அங்கு காணப்படவில்லை. குகைக்கு எதிர்ப்புறத்தில் ஒரு பெரிய ஆலமரம் இலைகள் நிறைந்த கிளைகளைப் பரப்பி குளிர்ந்த நிழலைக் கொடுத்துக் கொண்

டிருந்தது. நல்ல காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. இந்தக் குகைக்குப் "புலிக்குகை" என்று பெயர். இதன் சரித்திர மென்ன வென்றால் அக்குகையில் நெடுங்காலமாக ஒரு சிறுத்தைப் புலி வசித்துக் கொண்டிருந்தது. அக்கொடிய புலி பகலெல்லாம் குகைக்குள் படுத்துறங்குவதும் பொழுதுபட்டு இரவானதும் அம்மலை மீது வசிக்கிற தக்கர் என்னும் முரட்டு மனிதர்களின் ஆடுமாடுகளை அடித்துக் கொண்டுபோய்த் தின்பதுமா யிருந்தது. அந்த ஏழை மக்கள் தங்கள் ஆடுமாடுகளை இழந்து வருந்தியது மல்லாமல், எங்கு மனிதர்களையும் கொன்று விடுகிறதோ என்று மிகவும் பயந்து இருந்தார்கள். அதைக் கொன்று அதனால் நேரிடும் துன்பத்தை நீக்க ஒருவரும் மனந் துணியவில்லை. இங்ஙனம் பல நாட்கள் சென்றன. கடைசியாக யோகானந்த சுவாமிகள் தற்செயலாக அவ்விடம் வந்தார். அங்கு அப்புலியினால் நேரிடும் துன்பங்களைக் கேள்வியுற்றார். உடனே அப்புலியைக் கொன்று அங்கு வசிக்கும் ஜனங்களின் பயத்தைப் போக்க வேண்டு மென்று எண்ணங்கொண்டார். ஒருநாள் அச்சிறுத்தைப் புலி குகையில் படுத்துறங்கிக்கொண்டிருக்கும் சமய மறிந்து ஒரு நீண்ட ஈட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு சந்தடியின்றி மெல்ல மெல்ல அக்குகைக்குள் சென்றார். பருத்துக் கொழுத்திருந்த அந்தப் பெரியபுலி குகைக்குள் கால்களை நீட்டிப் படுத்துறங்கிக் கொண்டிருந்தது. அதுதான் சமய மென்றறிந்த யோகானந்தர் ஈட்டியால் அதை ஒரே குத்தாகக் குத்தினார். அவர் சண்டை செய்வதில் கைதேர்ந்த வீரனாக விருந்தவர். ஆதலால் அவர் குத்தின ஒரே குத்தினால் அக்கொடிய புலி இறந்துவிட்டது. இதையறிந்த அம்மலைவாசிகள் அவரைப் புகழ்ந்து கொண்டாடிய தோடு அவரை அக்குகையையே வாசஸ்தலமாகக் கொண்டு தங்களுடன் வசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். அவர் கொன்ற புலியின் தோலை யுரித்துப் பதன்படுத்தி அப்புலித்தோலை ஆசனமாக உபயோகித்துக் கொள்ளும்படி அவருக்குக் கொடுத்தார்கள். கடவுளை நிம்மதியாகத் தொழுது யோகம் செய்வதற்கு அந்த இடம் தகுதியுள்ளதாகக் காணப்பட்ட படியால் அவரும் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி அது முதல் அப்புலிக் குகையிலேயே வசித்து வருகிறார். முன்பு அக்குகையில் புலி வசித்திருந்த படியால் அதற்குப் புலிக்குகை யென்று பெயர் வழங்கப்படுகிறது. (இக்குகை, பம்பாய் மாகாணத்தில் மேதாரமலையில் Panther's Cave என்னும் பெயருடன் இன்றும் காணப்படுகிறது) நிற்க,

நட்டாஜி, யசாஜி இருவரையும அன்புடன் வரவேற்று உபசரித்த யோகானந்த சுவாமிகளிடத்தில் அவர்களிருவரும் தாங்கள் சுவாமிஜியினிடம் வந்த காரியத்தை விவரமாகச் சொன்னார்கள். முதலில் தாங்கள் இன்னாரென்பதைத் தெரிவித்து விட்டுப் பிறகு, கலியாண ஊர்வலம் சென்றதும், பீஜப்பூர் சிப்பாய்கள் வழிமறித்துத் தடுத்ததும், நட்டாஜி சேனைத்தலைவனைக் கொன்றதும், கலியாணப் பெண்ணாகிய கங்காபாயை சிப்பாய்கள் கவர்ந்து கொண்டு போனதும் ஆகிய எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொல்லி, நட்டாஜிக்கு யாதொரு ஆபத்தும் வராமல் பாதுகாக்கச் சுவாமிஜியவர்களால் தான் முடியும் என்று அறிந்து நட்டாஜியின் தகப்பனார் தங்களை அவரிடம் அனுப்பி வைத்ததையும் தெரிவித்தார்கள். சுவாமிஜியவர்கள் இவைகளை யெல்லாம் கேட்டு, பீஜப்பூர் அரசாங்கத்தின் கொடுங் கோலாட்சிக்காக மிகவும் மனம் வருந்திக் கங்காபாய் கொடியவர்களான சிப்பாய்களால் கவர்ந்து போகப்பட்டதை நினைத்து அச்சிறுமியின் நிலைமைக்காக மிகவும் விசனப்பட்டார். பிறகு அவர் மிகுந்த வருத்தத்துடன் சற்றுயோசித்தார். கடைசியாக அவர் நட்டாஜி தம்முடன் வசிக்க ஒப்புக் கொண்டார். "நட்டாஜியைப்பற்றி ஒருவரும் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் அவனுக்கு யாதொரு தீங்கும் வராவண்ணம் தாம் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் விடையளித்தார். உடனே யசாஜி நட்டாஜியை அவ்விடத்தில் விட்டு விடைபெற்றுக் கொண்டு தன் கிராமம் செல்லப் புறப்பட்டான். நட்டாஜி அவனுக்கு விடையளித்து, கங்காபாயைப் பற்றிய செய்தி தெரியவந்தால் உடனே தனக்குச் சொல்லியனுப்பும்படி கேட்டுக் கொண்டான்." அப்படியே செய்வதாகச் சொல்லி யசாஜி புலிக்குகையை விட்டுப் புறப்பட்டு சௌக் கிராமம் நோக்கிச் சென்றான்.

(தொடரும்.)

இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் என்னுமிடத்தில் உலகத்திலுள்ள பெரிய துறைமுகம் கட்டப்பட்டிருக்கிறதாம். அது ஆயிரத் தைம்படி நீளமும் நூற்றிருபதடி அகலமும் உள்ளதாம். இதைக் கட்டுவதற்கு 1906-ம் ஆண்டில் நாற்பது லக்ஷம் பவுன் அனுமதிக்கப்பட்டதாம். ஆனால் யுத்தம் ஏற்பட்டதின்பலனாக அதற்கு வேண்டிய சாமான்கள் விலை இரட்டிப்பாய் விட்டதால் எண்பது லட்சம் பவுன் ஆகியிருக்கிறதாம்.

ஊன்றி உணர்தற்குரிய

உண்மைகள்

(ஸ்ரீமான் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியது.)

நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்று மிதற் கோரைய முண்டோ? (1)

நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
நேயம் கண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை யுடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ (2)

உள்ளந் தேறிச் செய் வினையில்
ஊக்கம்பெருக உழைப்போ மேல்
பள்ளம் உயர் மேடா காதோ
பாறை பொடியாய்ப் போகாதோ? (3)

வாட்டு முலகில் வழுத்தரிய
வாழ்க்கைத் துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
ஆக்கி வைப்ப தழகாமோ? (4)

ஜாதி ஜாதி யென்று பெரும்
சண்டை போட்டு மண்டைகளை
மோதிமோதி யுடைத்து நிதம்
மோசம் போவதறி யீரோ? (5)

கால நதியின் கதியதனில்
கடவுளாணை காண்போ மேல்
ஞாலமீது சுகமெல்லா
நாளு மடைந்து வாழ்வோமே (6)

ஸ்ரீ ஹர்ஷ. சரிதம்

பிறப்பு (உ)

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

யாவராலும் எளிதிலே சொல்லுவதற்கு இயலாததான இமய மலைத் தொடர்களுடையவும் தார்பாலைவனத்தினுடையவும் மத்தியத்திலே தனேசுவர ராஜிய மிருக்கிறது. பாரதத்திடை படையெடுத்து வரும் பகைவர்களுக்கு அதுவன்றி சுலபமான வழி பிறிதில்லை. பாரதத்திடை படை யெடுப்பவர்களுக்கும் போர் செய்பவர்களுக்கும் அது ஒரு பொதுப் படைக்களம். பெயர்பெற்ற பாரதப் போர் இவ்விடத்தில் தான் நடைபெற்றது. அலக்ஸாண்டர் தன் திக்கு விஜயத்தை முடித்துக்கொண்டதும் இவ்விடததில் தான். மகமது கோறியும் பிரதிவி மன்னனும் போர் தொடுத்தும் இவ்விடத்திலேயே. மகம்மதியர் இந்தியாவை அடக்கியாளுவதற்கு போர் செய்ததெல்லா மிங்குதான். பாரத நாட்டின் வழி யெனத்தகும் இவ்விடத்தில் ஒரு நாட்டை ஸ்தாபனஞ் செய்பவர்களுக்கு பாரத நாட்டை பூரணமாக அடக்கியாள ஆற்றலுண்டாகும். பகைவர் படை யெடுக்கில் அவரைத் தடுத்து நிறுத்தி தன் வசங் கொண்டு வர வசதி இங்குண்டு.

இத்துணை சௌகரியமுள்ள தனேசுவரத்திலிருந்து வட இந்தியா முழுவதும் அடக்கியாண்ட நமது ஹர்ஷச் சக்கிரவர்த்தியின் குலத்தை ஸ்தாபனஞ் செய்தவன் புஷ்ப பூபதியென்னும் பூபன். பரணன் இதைப்பற்றி கூறுகையில் " ஸ்ரீகண்ட நாட்டின் ஒரு பகுதியாகிய தனேசுவரத்தை யாண்டுவந்த புஷ்ப பூபதியெனு மிவன் பைரவாசாரியனெனும் ஒரு சைவ சன்னியாசியைப் பழகி வந்தான். அச்சன்னியாசி தன் சீடனால் தனக்கு கிடைக்கப்பெற்ற அதி திவ்வியமான வாளாயுதத்தை புஷ்ப பூபதிக்குக் கொடுத்தார். பின் சன்னியாசி அரசனை தான் நடத்தப்போகும் மஹாகால விருதயமெனும் கருமத்திற்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது லக்ஷ்மி தேவி தோன்றி அரசனுக்குத் தேவையான வரங்களை வழங்கிவிட்டு "நீ ஒரு முக்கியமான அரசகுலததை யுண்டு பண்ணினவ னவாயென்

றும் அதிலிருந்து மந்தாதாவிற்கும் அரிச்சந்திரனுக்கும் ஒப்பான ஒரு மகவு உண்டாகு மென்றும் வாழ்த்தினாள். பின் புஷ்பபூபதியின் காலத்திலேயே ஹர்ஷருடைய பிதாவான பிரபாகர வர்த்தனர் தோன்றினர்'' என்று கூறுகிறார்.

பணன் இவ்வரலாற்றைச் சொன்னாலும் ஹர்ஷருடைய கல்வெட்டுகளில் இப்பெயரைக் காணவில்லை. ஹர்ஷருடைய குலத்தவருடைய கூட்டத்தில் புஷ்பபூபதியின் பெயர் இல்லை. அதனால் புஷ்ப பூபதியை சரித்திர புருஷனாக எண்ண வழியில்லை. கல்வெட்டுக்களால் நரவர்த்தனன், ராஜியவர்த்தனன் ; ஆதித்தியவர்த்தனன், பிரபாகரவர்த்தனன் என்ற பெயர்களே புலப்படுகின்றன. ஹர்ஷவர்த்தனன் வைசியகுலத்திலே பிறந்தவரென்று யுவாங்சுவான் கூறுகிறார். நரவர்த்தனன் யசோதர சக்கிரவர்த்தியின் காலத்தவனாகவும் அவன் கீழிலிருந்து அரசாண்ட மன்னவனாகவும் இருந்திருக்க வேண்டும். நரவர்த்தனனுக்கு வச்சிரிணி தேவியின் புதல்வனே ராஜியவர்த்தனன். ராஜியவர்த்தனனுக்கு அப்ஸரா தேவியிடம் ஆதித்தியவர்த்தன னெனும் புதல்வன் பிறந்தான். அவ்வாதித்திய வர்த்தனன் மகதத்தையாண்ட மகாசேன குப்தனது சகோதரியான மஹாசேனகுப்த ராஜகுமாரியை மணந்தான். கீர்த்தி வாய்ந்த குப்த ராஜவம்சத்திலே யிருந்து ஆதித்தவர்த்தனன் விவாஹஞ்செய்ததினால் அவர் புதல்வரான பிரபாகர வர்த்தனர் பெரும்பேறு பெற்றார்.

ஹர்ஷருடைய கல்வெட்டுகளில் நரவர்த்தனன், ராஜியவர்த்தனன், ஆதித்தவர்த்தனன் முதலியோருக்கு 'மஹாராஜா என்ற விருதுதான் காணப்படுகிறது. பிரபாகரவர்த்தனனுக்கு மஹாராஜாதிராஜன், பரமபட்டாகரன், என்ற விருதுகள் காணப்படுகின்றன. தனேசுவர அரசர்களில் முதன்மையாகப் பெருமை பெற்ற அரசன் பிரபாகரவர்த்தனனென்று கூறலாம். ஆதித்தவர்த்தனனும் பெருமை வாய்ந்தவனே. அசுவமேதாதி பெரிய யாகங்களைச் செய்ததாலும் கொற்றவர் குலத்தில் குறை சற்றுமில்லாத குப்தவரச குலத்திலிருந்து மஹாசேனகுப்தையென்ற கன்னிகையை மணஞ்செய்து கொண்டதாலும் ஆதித்தவர்த்தனனுக்குப் புகழுண்டாயது. இதனால் பிரபாகரவர்த்தனனுக்குண்டான புகழுக்கு அளவில்லை.

பிரபாகரவர்த்தனன் அல்லது பிரதாபசீலன் சுமார் எ. டி. 580 தோடு தனேசுவரத்தை ஆட்சி புரியத் தொடங்கினான். சிந்து,

கூர்ஜாம், காந்தாரம், லாடம், மாளவம், முதலிய தேசங்களோடும் ஹூணர்களோடும் போர் தொடர்ந்து வெற்றி பெற்றார். செங்கோல் செலுத்தித் திறனே அரசாண்டு வந்தார். தருமம் எங்கும் தவழ்ந்து கொண்டிருந்தது. தானம் பெருகியது. சத்திரங்களும் சாவடிகளும் நாடெங்கும் நிறைந்தன. இவைகளைப் பரணனது வருணனைகளால் நன்கு தெரியலாம். பிரபாகரவர்த்தனனுக்கு பட்டமஹிஷி யசோமதி தேவி அல்லாது யசோவதி தேவியென்றும் கூறுப. அழகும் அன்பும் அமையப்பெற்ற அரசகுல கன்னி அழகில் அணங்கே யன்னாள். பரணன் இப்பெண்மணியை பார்வதி தேவி, ரோகிணி, லக்ஷ்மி, அருந்ததி, முதலிய தெய்வ மாதர்களோடு உவமித்துக்கூறுகிறான். வீரமும் ஆண்மையுமுடைய பிரபாகர வர்த்தனனுக்கும் பெண்டிர்களுக்கு அமையவேண்டும் எல்லா வெற்றிகளும் ஒருங்கே அமைந்த யசோமதி தேவிக்கும் புதல்வராகப் பிறந்த ஹர்ஷர் இந்த இயல்பிலேயே நற்குணமெல்லாம் அமைந்திருந்ததில் அதிசயமென்ன. தாய் தந்தையருடைய குணவிசேஷங்கள் மக்களுக்குண்டாவது இயல்பன்றோ ?

ஹர்ஷருடைய பிறப்பைப்பற்றி பாணன் இவ்விதம் வருணித்திருக்கிறா. “ஆதித்த பக்தனுகிய பிரபாகரவர்த்தனன் தினமும் வையறைத்துயில் நீத்து வெண்பட்டாடை யணிந்து ஆதித்தனை ஆராதனை செய்து வந்தான். பதுமராகப்பத்திரத்திலே செந்நிற மலர்களைக்கொண்டு அருச்சனை செய்து வருவான். மகப்பேற்றிற்காக முப்போதும் சூரியனை ஆதித்தமெனும் மந்திரத்தைச் சொல்லி வணங்கினன். இதன் பயனுய் ஒரு நாள் நள்ளிரவு யசோமதி தேவி ஒரு கனுக்கண்டாள். சூரியனுடைய ஜோதி மயத்திலிருந்து இரு ஆண்களும் ஒரு பெண்ணும் தன் கருப்பைக்குள்ளே புகுவதாய்க் கண்டாள். தான் கண்ட கனவை பிரபாகரவர்த்தனனுக்கு கூறினள். தன் மனைவியின் கனவைக்கேட்டு மிகக் களி கூர்ந்தான்.

காலதாமதமின்றி யசோவதிதேவி ராஜியவர்த்தனன்; ஹர்ஷவர்த்தனனென்ற இரண்டு புதல்வரையும் ராஜஸ்ரீ யென்ற ஒரு புதல்வியையும் பெற்றாள். கிருஷ்ண பக்ஷம் துவாதசி கார்த்திகை நக்ஷத்திரத்தில் பிரதோஷ ஸமயம் கழிந்தவுடன் ஹர்ஷன் பிறந்தான். ஹர்ஷன் பிறந்த நேரத்துப் பலன்களைப் பார்த்து அரமனைச் சோதிடன் தாரனுதன் பரதாதி சக்கிரவர்த்தியைப் போல ஒரு குடைக்

கீழ் உலகாளுவானென்று சொன்னதாய்க் கூறுகிறான். ராஜியவர்தத னனுக்கு ஆறு வயதானபோது ஹர்ஷனுக்கு மூன்று வயது. ராஜ ஸ்ரீயை கருவுற்றிருக்கிறாள். இரண்டு குமாரர்களும் தங்கள் மாமன் மகனை தண்டியோடு சேர்ந்து விளையாடி வந்தனர். ஹர்ஷன் உடல் வனப்பும் வன்மையும் கூரிய மதியுள்ளவனுமாக விளங்கினான். அரசகுமாரர் இருவரும் இளம்பிறை சந்திரனைப் போல வளர்ந்து வந்தனர்.

கல்வி (௩)

குருகுலத்திலிருந்து கல்வி பயில்வது முற்கால முறைமை. ஒவ்வொரு முக்கியமான குலத்திற்கும் ஒவ்வொரு குரு விருப்பார். கல்வி பயிலுங்காலம் முப்பது ஆண்டு. சிலர் இருபத்தைந்திலும் முடிப்பார்கள். ஆசிரியனுக்கு வேண்டிய தொண்டு செய்து அவரோடு அங்கே வாழ்ந்து வருவார்கள். இம்முறையில் நாளடைவில் மாற்றம் வந்தது. ஹர்ஷ காலத்தில் நடைபெற்ற கல்வி முறையைப் பற்றி யுவாங்சுவான் கூறியிருப்பது அடியில் வருமாறு—பாரதீயர் பாலர்களை பயிற்றுவிப்பதற்கு பன்னிரெண்டு அதிகாரமுள்ள ஒரு நூலை முதலில் பயிற்றுகிறார்கள். ஏழு பருவமானதும் பெரிய சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்யத தொடங்குகிறார்கள். முதலாவது அதிகாரத்தில் நாமம் சப்த வித்தை யென்பனவற்றையும் இரண்டாவது அதிகாரத்தில் சிட்ப வித்தையைப் பற்றியும் மூன்றாவது அதிகாரத்தில் சிற்சாவித்தையைப்பற்றியும் நான்காவதில் ஹேதுவித்தையைப் பற்றியும் ஐந்தாவதில் ஆன்மவித்தையைப் பற்றியும் பயிலுகிறார்கள். பிராமணர் நான்கு வேதங்களையும் பயிலுகிறார்கள். உபாததியாயர்கள் மேலான கிரந்தங்களை மிக நுட்பமாகப்படித்தவர்கள். வானசாஸ்திரத்திலும் இவருக்கு வன்மை யுண்டு. சீடர்களுக்கு நூலின் பொது விவரத்தையும் மொழிகளின் ஒலிகளையும் பயிற்றுவிக்கிறார்கள். சீடர்களாகிய சிறுவர்க்கு கல்வியில் விருப்பத்தை யுண்டுபண்ணி அதில் வல்லவராக்குகிறார்கள். இதுவுமல்லாமல் அறிவில்லாதவருக்கு அறிவையும் பாமரர்களுக்கு உற்சாகத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். அறிவுள்ள மாணவனிடம் தனியாக அன்பு செலுத்தி வருவார்கள். முப்பது வயதுவரையிலும் மாணவர் பயிலுகிறார்கள். அப்பொழுது அவர் அறிவு நிலை நிற்கவும் இயல்பு பக்குவமாகவுஞ் செய்கிறது. பின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில்களில் சென்று குருக்களோடு பக்தி யுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது பொதுவாக எல்லாக் குடிகளும் பெறும் கல்வி முறை

அரசர் பயிலும் கல்வி முறைக்கு இதிலிருந்து சற்று வித்தியாச முண்டு.

மனு சாஸ்திரத்திலிருந்தும் கௌடிலனுடைய அர்த்தசாஸ்திரத் திலிருந்தும் கமந்தகியின் நீதி ஸாரத்திலிருந்தும் பண்டைய பார தீயருடைய கல்வி முறை எத்தகைய தென்று ஒருவாறு அறி யலாம். அரசர்கள் பதினைந்து வயதிற்குள்ளே லேகனம், ரூபம், கணனம் ; வியவகாரம், விதிவித்தை முதலியவற்றில் ஆற்றல் பெறு கிறார்கள். அன்னீக்ஷகி, திரயி, வார்த்தை, தண்டநீதி யென நான் காக பகுத்திருந்தார்கள். இவை யல்லாமல் யானையேற்றம் குதிரை யேற்றம் தேர் செலுத்தல் முதலியனவும் பயிலுகிறார்கள்.

இங்ஙனமுள்ள நூற்களோடு சுத்த ஸாஹித்யத்தையும் ஹர்ஷர் பயின்று வந்தார். வியாசபாரதம், ஸுபிந்துவின் வாசவதத்தை, அரிச்சந்திரனுடைய வசனங்கள், சாதவாகனுடைய மப்பசதகம், பிர வரசேனனுடைய சேதுபந்தனங் காவியம், லரஸனுடைய நாடகங் கள், காளிதாஸனுடைய கவிகள், குணாட்டியனுடைய பிரஹத்கதை முதலியனவற்றை கற்றிருக்கிறார். ஹர்ஷருடைய இயக்கிய முயற் சியைப்பற்றி தனியத்தியாயமாக மேற்கூறப் போவதால் இதோடு இங்கு விட்டுவிட்டோம்.

இங்கிலாந்திலுள்ள செயிண்ட் கிளெமெண்ட் மாதா கோவிலில் ஒரு விநோதமான திருவிழாவை ஒவ்வொரு வருஷமும் மார்ச்சுமா தம் 31-ந்தேதி கொண்டாடுகிறார்கள். அதற்கு ஆரஞ்சுப் பழத் திருநாள் என்று பெயர். அந்தத் திருவிழாவைப்பார்க்க லண்டனி லிருந்து எராளமான ஜனங்கள் வருகிறார்கள். மாதா கோவில் எங் கும் ஆரஞ்சிப் பழத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கு மாம். பிரார்த்தனைக்குப் பிறகு ஆரஞ்சிப் பழங்களை எல்லோருக் கும் கொடுக்கிறார்கள். இந்தத் திருவிழா என்ன காரணத்தால் எற்பட்ட தென்று ஒருவருக்கும் தெரியவில்லை.

முந்திரிக் கொடியைப் பக்குவம் செய்து அதிலிருந்து ஜெர்ம னியர் நூல் நூற்று வருகிறார்களாம். உறுதியான கயிறு செய்ய இந்த நூல் மிக உபயோகமாக இருக்கிறதாம். இனிக் கயிறு விலை மலியும்.

ஏனாதிநாயனார் சரிதை

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியது.

கலி வெண்பா

போத்துப் புலிக்கொடியைப் பொன்வளாயினிற்றீட்டி
ஆத்தி யணிந்துலகை யாள்வளவன்—கீர்த்திபெறு
சோணாட்டிற் றண்பணைசூழ் தொல்லெயின னூரதனில்
ஏனா ரெழிற்சான்றா ரென்றுரைக்கு—மானாரும்
ஏனாதி நாதனா ரேற்றதிரு நீறதின்மேற்
றானாருந் தொண்டிற் றலைசிறந்து—கூனாருந்
துங்கமதியுஞ் சுரர்நதியையும் புனைந்த
மங்கை யொரு பாகன் மலரடியைப்—பொங்குமன்பா
லேத்தி யரசர்க் கிகல்வாட் படை பயிற்றும்
மீத்திகழும் விஞ்சை தனின் மேம்பட்டார்—பார்த்து வரும்
அந்தத் தொழிலால் வருமூ தியமனைத்தும்
அந்திச் சடையா ரடியருக்குப்—புந்திமகிழ்ந்
தீந்து வரு நாளி லிவர்போல வாட்டொழிலிற்
றேர்ந்தவதி சூரன்றான் செய்து வந்த—நாந்தகத்தின்
வித்தை பயிற்றுவதில் வேறா ரிணையெனவே
பித்த ரெனத் தருக்கிப் பிள்ளைகளை—யெத்திசையுந்
தேடிக் கொணர்ந்து சிலம்பகூடஞ் சமைத்து
ஊடலின்றிக் கற்பித் துறுகாலை—நாடறியும்
ஏனாதி நாதரிடந்தனின்மா ணாக்கரெலாம்
நாணாளும் போவதனை நன்குணர்ந்து—ஈனமுள
ஆதனதி சூரனழுக்கா றடைந்தவரோ
டேதமுறும் வாட்போ ரியற்றுதற்குத்—தீதுடைய
தன்கிளைஞ ரோடுபோய்ச் சாற்றுவாட் போர்புரிய
உன்கிளைஞ ரோடுவா வென்றுரைக்க—இன்புடனே
கேட்டவுடன் சிங்கே றெனக்கிளர்ந்து கச்சணிந்து
வாட்படையுங் கேடகமும் வார்கழலுங்—கோட்டமின்றித்
தாங்கிப் புறப்படலுந் தம்மவர்கள் சூழ்ந்துவர
ஆங்கெதிர்த்தார் யாவரையு மந்தகனார்—வீய்ந்திடுவீ
ராமென்று நூறி யனைவரையும் வாட்படையால்
ஓமத் தழல்போ லுடற்றுதலு—நேமமுடன்
வந்தெதிர்த்தார் யாரும் வளியெதிர்ந்த பஞ்செனவே
புந்தியல மந்து புறமிடலுஞ்—சிந்தையழிந்
தோடுமதி சூர னுயர்மான நின்றீர்ப்ப
நாடியிந்த வேனாதி நாதனைநான்—பீடுபெற

வஞ்சனையால் வெலவே னென நினைந்து மற்றையநாள்
விஞ்சுபல பேருயிரும் வீயாமல்—எஞ்சலின்றி
நாங்க ளிருபேரும் வேறிடத்தி னண்ணியமர்
ஓங்கு சினத்தோ டுடற்றுதற்கு—ஆங்கி நீ
வந்திடுவா யென்று மழவிடையார் தாசருக்குச்
சிந்தித் தெழுதிச் செலவிட்டான்—அந்தவுரை
கேட்டலுமே யேனாதி நாத ரகங்கிளர்ந்து
மூட்டெரிபோற் றக்க தெனமொழிந்து—கோட்டமிலாக்
கைவா ளமர்விளைக்கத் தான்கருது மக்களத்தில்
வைவாளுரவோன் வருகவென—வெய்ய பல
சுற்றத்தா ரின்றிச் சுடர்வாள் பலகைகொண்டு
மற்புயலும் போந்து வரக்குறித்த—நற்களத்தே
பற்றலனை முன்வரவு பார்த்துத் தனிநின்றார்
புற்றரவு போல்வான் புனிசமுள—வெற்றிதரும்
நீறணிவார் தங்களுக்குத் தீங்கிழையா ரென்ன நினைந்
தூறிலா வெண்ணீ றொருநாளுந்—தேறிமன
அன்போ டணியா வதிசூரனுர்வ மின்றி
மென்பூசி நெற்றி விளக்கியே—பின்பதனைத்
தோன்றாத வண்ணஞ் சுடர்ப் பரிசை யான் மறைத்துத்
தோன்றலே னாதியர்முன் றோன்றினன்—தேன்றுளிக்கு
மாலைபுனை யேனாதி நாதர் மலைவதற்குச்
சீலமொடு தாள்பெயர்த்துச் சென்றபொழு—தாலமன்ன
தீயனதி சூர னுதலிற் றிருநீறு
பாய விளங்கிவதைப் பார்த்துமன—நேயமொடு
முன்பிவர் மேற் காணு முதன்மை பெறு வெண்ணீறு
இன்றிவர்மேற் கண்டே னிவரெமது—மன்றல் கமழ்
கொன்றைமுடியா ரடியா ரென்று குறித்துளத்தில்
அன்றமர்செய் வார்போ லபிநயித்து—நின்றுணர்வார்
நாந்தகமுங் கேடகமு நீக்கியிந்த நற்றவரைத்
தேய்ந்த நிராயுதரைச் செற்றபவம்—வாய்ந்திடுமென்
றஞ்சி யவைகளகற்றா தெதிர்ப்பவர்போ
னெஞ்சிலுன்னி யன்னார்க்கு நேர்நின்றார்—வஞ்சனும்
வெய்ய நெடுவடிவாள் கொண்டு விறலடியார்
துய்ய முடியைத் துணித்தனனல்—செய்யசடை
யெம்பெருமானேனாதி நாதர்முன் பெய்தியிந்த
அம்புவியோரேத்த வனவரதம் வெம்புதலற்
றெம்மோடுறைகுதியா வென்று கரந்தனர் பின்
தம்மான் விபூதி தனக்காம—மெய்ம்மையிலாப்
பாதகனுக் காவி பரிந்தளித்த வேனாதி
நாதனடியைத் துதிப்போ நாம்.

ம து சா ர ம்

(காபி ரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

II

மதுசாரம் ஜீவதாதுக்கு விஷமாகும்—Alcohol Protoplasm poison.

"Alcohol acts as a definite protoplasm poison upon all forms of cell life—" Sir B. Ward Richardson M. D.

தேகமானது தேசத்திலடங்கிய சனங்களைப்போலாகும்.

ஒவ்வொரு உயிருள்ள பொருளும், உயிருள்ள நுண்ணிய சூக்குமாந்திரங்களால் ஆக்கப் பெற்றன வென்று நாம் தெரிந்திருக்கின்றோம். மனித தேகம் போன்ற உயர்ந்த பிராணிகளில் சூக்குமாந்திரங்கள் கோடிகோடியாகப் பிரிந்தாலும் அவை யொன்றோடொன்று சேர்ந்தேயிருக்கின்றன. அவ்வொரு சூக்குமாந்திரமும் தேகத்தைத் தகுந்தபடி சுகமாகவும் நிறைந்த சீவனுள்ளதாகவும் வைப்பதற்கு அதனதன் வேலையைச் சரிவரச் செய்கின்றது. ஒரு தேசத்தில் பெருந்தொகையான சனங்களடங்கி யொருங்கு சேர்ந்து வாழ்வது அத்தேசத்தின் அங்கங்களாகு மென்பதை நீயோசித்துப் பார்ப்பையாயின், தேகம் எப்படி வேலை செய்கிறது எப்படி சீவிக்கிறது என்ற விஷயம் உனக்கு விளங்கும். சூக்குமாந்திரங்களுள் சில, மூளையின் வேலையைச் செய்கின்றன; அதாவது, நினைக்கின்றன, கட்டளை யிடுகின்றன, தேகத்தின் சுகாசுகங்களை விசாரிக்கின்றன. சில, சுவாச உறுப்பின் வேலையைச் செய்கின்றன; அதாவது தேகத்திற்கு உயிர்வாயுவைச் சேகரித்து உதவுகின்றன; சில, வயிற்றின் வேலையைச் செய்கின்றன; அதாவது; ஆகாரத்தை வாங்கி அதனைச் சித்தஞ் செய்கின்றன. சில, இரத்தத்தின் வேலையைச் செய்கின்றன; அதாவது, சூக்குமாந்திரங்கள் பட்டினியா யிராதபடி அவைகளுக்கு ஆகாரத்தையும் உயிர்வாயுவையுங் கொண்டுபோயுதவுகின்றன. சில எலும்பின் வேலையைச் செய்கின்றன; அதாவது, தேகம் நிமிர்ந்து நிற்கவும், அழகான உருவம் அமையவும், பலத்தோடிருக்கவுஞ் செய்கின்றன; அதாவது, எல்லாச் சூக்குமாந்திரங்க

ளும் தசையை யசைக்கவும், வேலை செய்யவும், ஆடவும், ஓடவும் சக்திவாய்ந்திருக்கின்றன. சில தேகத்திலிருந்து கழிய வேண்டிய அசுத்தங்களைக் கழியச் செய்கின்றன; அதாவது, எல்லாச் சூக்கு மாந்திரங்களின் சுகங் கெடாதிருக்கும்படி தேகத்திலிருந்து கழிய வேண்டிய அசுத்தமும் விஷமுள்ளதுமான பொருள்களை வெளிப் படுத்துகின்றன. சில பார்ப்பதற்கும் கேட்பதற்கு உருசித்தற்கும் வாசனை யறிவதற்குஞ் சக்திவாய்ந்திருக்கின்றன.

சூக்குமாந்திரங்களுக்குத் தேவையானவை.

சூக்குமாந்திரங்கள் பரிமாணத்திலும் உருவத்திலும் சுபாவத்தி லும் வேலையிலும் வேறுபட்டாலும், அவையெல்லாம் ஒரு விஷயத் தில் ஒத்திருக்கின்றன; அதாவது, அவை யெல்லாம் ஜீவதாது அல்லது மூலசத்தை அல்லது பிரதம பீஜத்தைக் கொண்டிருக்கின் றன. அவைகள் உயிரிருக்க வேண்டிய அதே நியமங்களின்படி யிருக்கின்றன. அதனால் சூக்குமாந்திரங்கள் ஆரோக்கியமாகவும் நன் னிலைமையிலு மிருக்கும். ஆகையால், தேகநிலைக்கு ரந்திரங்ளில் அமைந்துள்ள ஜீவதாதுவின் நிலைமை யெப்படி யிருக்கின்றதோ அதனைப் பொறுத்திருக்கின்றது.

ஆரோக்கியமுள்ள ஜீவதாதுக்குத் தேவையான இரண்டு முக்கிய விஷயங்களாவன :—

(1) அதிக நீர், உணவு, உயிர்வாயு.

(2) அதனைக் கெடுக்கக் கூடிய விஷவஸ்துக்கள் அதனைச் சேராதபடி காத்துக் கொள்ளல்.

ஜீவதாதுக்கு விஷங்களாவன.

ஜீவதாதுக்கு விஷங்களாகுமெனத் தெரிந்திருக்கிற சில விஷங்களுண்டு. அவ்விஷங்கள் ஜீவதாதுவைக் கெடுப்பதால் அதன் வேலை தடை படுகின்றது. நாம் சுகவாழ்க்கை யில் வாழவேண்டு மென்று கற்பிக்கிற வைத்திய பண்டிதர்களும் மற்றப் பெரியோர்களும் ஜீவதாதுவைக் கெடுக்கும் விஷங்களையும், நம் உயிருக்குத் தீங்கு செய்வனவான விஷங்களையும், (toxins) யுண்டாக்குங்கிருமிகளை (Germs) யும் எப்படித் தொலைப்ப தென்று கண்டறிவதற்குத் தங்கள் காலத்தை அதிகமாகச் செலவழிக் கின் றனர்.

மதுசாரத்திற்கும் ஜீவதாதுவைக் கெடுக்கும் விஷங்களுக்கும் அதிக ஒப்புமை யிருந்தாலும் அவ்விஷப் பொருள்களை நீக்கி, மது சாரத்தை மாத்திரம் ஜனங்கள் உபயோகிப்பது வியப்பைத் தரு கின்றது.

ஜீவதாதுக்கு விஷமாகும் ஒரேயினமான விஷங்கள்:—

(1) ப்ரஸ்லிக் அமிலம் (Perussic acid), (2) வெடியுப்புத் திரா வகம் (Nitricacid), (3) கந்தகாமிலம் (Vitriol) (4) குளோரோ பாரம் (Chloroform—உணர்வழிக்கத் தக்க மருந்து) இவற்றைப் போன்ற சில விஷங்களு மிருக்கின்றன.

ப்ரஸ்லிக் அமிலம் ஜீவதாதுக்கு மிகக்கொடிய விஷங்களி லொன்றாகும். அதற்கு உயிர்வாயுவோடு கலக்கும் இரசாயன சக்தி (Chemical affinety) அதிகமாகவுண்டு. அன்றியும், சூக்குமரந்திரங் களின் உயிருக்கு மிக்க அவசியமான உயிர்வாயுவைப் ப்ரஸ்லிக் அமி லம் அதிவேகமாய் உறிஞ்சிவிடுகிறது. ஒரு பலசாலியான மனிதன் உன்னுடைய நெஞ்சை நெரித்துப் பிடிக்கும் போது உன் உயிரின் நிலைமை யெப்படி யிருக்குமோ அதுபோலவே, ப்ரஸ்லிக் அமிலம் உயிர்வாயுவை யுறிஞ்சிச் சூக்குமரந்திரங்களைத் திக்கு முக்காடச் செய்கிறது.

மதுசாரம் மேற் சொன்ன அமிலம் போலச் சூக்குமரந்திரம் களில் உயிர்வாயுவையுறிஞ்சி, அதனை யில்லாமற் செய்வதில் அவ்வளவு கடுமையான தல்லவாயினும், அது அதிக அளவாகுமானால் சூக்கு மரந்திரங்களைத் திக்குமுக்காடச் செய்கிறது.

மதுசாரம் நாயைக் கொல்லுகிறது.

"நான் பெரிதாக வளர்ந்த ஒரு நாய்க்கு இரண்டரை அவுன்ஸ் மதுசாரம் கொடுத்தேன். அந்நாய் உடனே தாழ்ந்த குரலால் அழுது செத்தப் பிணம்போலப் பூமியில் வீழ்ந்தது. அதனை நன் ருய்ச் சோதித்துப் பார்த்தேன். சிறிதும் உயிரில்லை. அது விரை வில் உயிர் துறந்தது. இம்மரணம் ப்ரஸ்லிக் அமில விஷத்தா லுண்டாகும் மரணம் போலவே யிருந்தது" என்று டாக்டர் பெர்ஸி (Dr. Percy) கூறுகின்ருர்.

மதுசாரம் ஒரு சிறுவனை இறக்கச் செய்கிறது.

சிலவேளையில் மதுசாரம் அதிக அளவில் மனிதர்களைக் கொல்

வதற்கும் ஏதுவாகும். "ஒருநாட் காலையில் ஒரு பிரபுவை ஒருவர் பார்க்க வந்தார். அவர்கள் சிறிது நேரம் பொறுத்து வெளியே போனபோது, அவர்களிருந்த அறையில் இரண்டு சிறுவர்களிருந்தனர். அங்கே மேசையின்மேல் அவர்கள் உபயோகித்துவந்த உஸ்கி (Whisky) தண்ணீர், கிளாஸ் டம்ளர் இவைகளுமிருந்தன. அவ்விரு சிறுவர்களில் சிறியவன் "இப்போது நாம் ஒருவரை யொருவர் பார்க்க வந்தவராக விளையாடலாம். நீ என்னைப் பார்க்க வந்தவர், நான் தாதா" என்று சொல்லித் தன் சகோதரனுக்கு அரைடம்ளர் உஸ்கியும் அரை டம்ளர் தண்ணீரும் விட்டுக்கொடுத்துத்தான் மாத்திரம் டம்ளர் நிறைய உஸ்கியை விட்டுக் குடித்தான். இருவரும் உஸ்கி புட்டியைக் காலி செய்தார்கள். சிறிது நேரத்திற்குள் இருவரில் சிறியவன் மரணமானான். மற்றவனை டாக்டர்கள் மிக்க பிரயாசை யெடுத்து உயிர் பிழைக்கச் செய்தார்கள்" என்று டாக்டர் செல்லுகிறார்.

நிகோடீன் (Nicotine) ஒரு சிறுவனைக் கொல்லுகிறது.

புகையிலையில் நிகொடீன் என்னும் விஷப் பொருளிருக்கின்றது. அது ஜீவதாதுக்கு விஷமாகுமென்பதை 1922-ம் ஆண்டு ஜுன் மாதம் 30 தேதி, இங்கிலாந்தில் வெளிவந்த ஒரு சமாசாரப் பத்திரிகையில் கூறப்பட்டிருந்தது தெரிந்து கொள்ளலாம்.

பதினொரு வயதுள்ள சிறுவனொருவன், 90 நிமிஷத்திற்குள் 9 சிகரெட்டுகள் குடித்தான். மறுநாட்காலையில் அவன் படுக்கையின் மேல் இறந்து கிடக்கக் காணப்பட்டான். டாக்டர், அவன் புகையிலையின் விஷத் தாலிறந்தான்" என்று சொன்னார். அரசாங்க சட்டம், 16 வயதுக்குட்பட்ட எந்தச் சிறுவனும் சிகரெட்வாங்கிப் புகை குடிக்கக் கூடாதென்று சொல்லுகின்றது. அந்தச் சிறுவன் சட்டத்தை மீறி நடந்ததால் அத்தகைய துன்பத்திற்கு ஆளானான்.

ஜீவதாதுக்கு விஷமாகுமெனக் கூறிய ப்ரஸ்ஸிக் அமிலம், வெடியுப்புத் திராவகம், கந்தகாமிலம், குளோரபாரம், மதுசாரம் முதலியவை, நீரைப் பெரிதுங் கருஷணிக் (attractive) குங்குணமுடையவையானதால் ஜீவதாதுவிலுள்ள நீரை யுறிஞ்சி, அதனை வளரச்செய்து தாகத்தை யுண்டாக்குகின்றன.

மதுசாரமும் இதே வேலையைச் செய்கின்றது. வெறியுள்ள மதுபானம் அதிகமாகக் குடிக்கிறவன் அதிக தாக முடையவனு

யிருக்கின்றான். அவனுக்கு இன்னும் அதிகம் வேண்டும் என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். ஓயாக்குடிய னென்று சொல்லப்படு கிறவன் எப்போதும் வரண்ட நெஞ்சினனாயிருப்பான். இப்படி மதுபானஞ் செய்வதாலுண்டாகும் அபாயங்களில் முக்கியமாக வொன்றிருக்கின்றது. அதாவது, மதுபானத்திற்கே விருப்பம் அல்லது பேராவல், மதுசாரத்தை அதிகமாக உண்டால்தான் அடங் கும்.

மேலும், ஜீவதாதுக்கு விஷங்களாகுமென்று நன்றாய்த் தெரிந் திருக்கிற மற்ற விஷங்களைப் போலவே மதுசாரமுமாகும். அதெப் படி ? முட்டையின் வெண்கருவை யெடுத்து மூன்று பாகமாக்கி, முதற்பாகத்தின் மேல் வெடியுப்புத் திராவகத்தையும், இரண்டாவது பாகத்தின் மேல் ப்ரஸ்ஸிக் அமிலத்தையும், மூன்றாவது பாகத் தின் மேல் மதுசாரத்தையும் ஊற்றினால் அவைகள் இறுகி, அவித்த முட்டையைப் போலக் கெட்டியாயிருக்கும். ஜீவதாதுவின் பெரும் பாகம், முட்டையின் வெண்கருவிலுள்ள (Protiens—தசையை வளர்க்கும் பொருள்கள்) அதே பொருள்களால் ஆக்கப்பெற்றிருக் கின்றது. அவித்தமுட்டை அல்லது இறுகியமுட்டை அழிந்து போன முட்டையேயாகும். அம்முட்டையிலிருந்து குஞ்சு பொரித்தல் கூடாது. அதுபோலவே, மதுசாரம், ஜீவதாதுவை இறுகச்செய்து அதன் உயிரைப் போக்கும் இயல்புடையதாம்.

மதுசாரம், மற்றக் கொடிய விஷங்களைப்போலச் சூக்குமரந் திரங்களைத் தாக்கி, அவைகளுக்குப் பிராணசக்தியைக் கொடுக்கும் உயிர்வாயுவையும், ஆகாரத்தையும், நீரையும் அபகரித்துவிடுகிறது. இவ்விதமாக, மதுசாரம், சூக்குமரந்திரங்களைக் கெடுத்துத் தேகத் தைக் காப்பாற்றிக் கொள்வதற்குரிய அவற்றின் முக்கியவேலையைத் தடைபண்ணுகின்றது. அதனால், எல்லாச் சூக்குமரந்திரங்க ளுந் துன்பப்படுத்துகின்றன. உயிருக்கு ஆதாரமான இருதயத் தின் சூக்குமரந்திரங்கள் ஜீவநதியாகிய (The river of life) இருதயத் தின் சூக்குமரந்திரங்கள், தேகத்தில் உணருஞ் சக்தியை யுடைய மூளை (brain), தேகத்தில் அசையுஞ் சக்தியை யுடைய தசைகள் (muscles), தேகத்தில் சுத்தஞ் செய்யுஞ் சக்தியையுடைய மூத்திரா சயங்கள் (the kidneys) இவையாவுஞ் சேதமாகிப் போவதால் தேக சுகங்கெட்டுப் போகின்றது.

மதுசாரம், ஜீவதாதுக்கு விஷமாவதுமன்றித் தாவரங்கள் அல்லது பிராணிகளின் சூக்குமரந்திரங்களின் உயிருக்கும் அபாயத்தை யுண்டு பண்ணுவதில் பெரிதுங் காரணமாகின்றது. அதனை அதிக அளவாகச் சாப்பிடும்போது, அது, விரைவில் சூக்குமரந்திரங்களைக் கொல்லுகின்றது. அதனைக் கிரமமாகச் சிறிதளவில் சாப்பிடும் போது உயிருள்ள எல்லாச் சூக்குமரந்திரங்களின் ஊக்கமான வேலைகள் பெரும்பாலுந் தடைப்படுகின்றது. இவ்வுண்மைகளைக் கீழ் வருவனவற்றாலறிந்து கொள்ளலாம்.

மதுசாரம் வளர்ச்சியைத் தடுக்கின்றது.

டாக்டர் ஜே. ஜே. ரிட்ஜ் (Dr. J. J. Ridge M. D.) என்பவர் கொடிபடரும் ஒரே செடியிலிருந்து ஒரே நேரத்தில் இரண்டு கொடிகளை வெட்டி நட்டனர். ஒருகொடிக்குச் சுத்தமான நீரே விடப்பட்டது. மற்றொன்றுக்குச் சுத்தமான நீரோடு நூற்றுக்கு ஒன்று மதுசாரஞ் சேர்த்துவிடப்பட்டது. அதாவது, நூறு துளி நீருக்கு ஒரு துளி மதுசாரஞ் சேர்க்கப்பட்டது.

பிறகு, ஆறாவது வாரக் கடைசியில் அவ்விரண்டிலும் குறிப்பிடத்தக்க வித்தியாச மிருந்தது. 'மதுசாரச் செடி' மற்றச் செடியின் பருமத்திற் பாதியும், அதில் இலைகளும் மலர்களும் குறைந்திருந்தன. இச்செடிக்கும் தன்னுடன் வளர்ந்த மற்றச் செடிக்கும் மிக்க வேறுபாடிருந்தது.

மதுசாரம் "ஓர்டிஸெல்லா" என்னும் பிராணியைக் கொல்லுகின்றது—Alcohol Kills Vorticella.

"ஓர்டிஸெல்லா" என்பது ஒரே சூக்குமரந்திரமுடைய நீரிலுள்ள ஒருவகை சுழல் பூச்சி. அது சுறுசுறுப்புள்ள பிராணி. அதனுடம்பு, பூசைமணியைப் போல் வாயகன்றதா யிருக்கும். அதனுடம்பில் கண்ணிமை மயிர்போலும் மயிர்கள் தொங்கி யிருக்கும். அம்மயிர்களே அப்பூச்சிக்கு அயுதங்களாகும். அவ்வாயுதங்களாலேயே தனக்கு ஆகாரங்கிடைக்கும்படி நீரைத் தள்ளிக்கொண்டே யிருக்கும். அதற்கு ஒரே காலுண்டு. அது, தனக்கு எங்கே ஆகாரமிருக்கிறதென்று அறிகிறதோ அங்கேபோய் அதனைப் பற்றிக் கொள்ளுகின்றது. ஆகாரங் கிடைக்காவிட்டால் அல்லது அபாயம் நேரிடுமென்று தெரிந்தால் அந்த இடத்தைவிட்டு வேறிடத்திற்குப்

போய்விடும். அது, தனக்கு ஏதோ அபாயத்தால் பயமுண்டாகு மாயின் உடனே தன்னுடம்பை ஒடுக்கிச் சுருக்கிக் கொள்ளும். அபாய மில்லை யென்று தெரிந்தால் அது, முன்போலத் தன் னுடம்பை நீட்டிக் கொண்டு வேலைசெய்யத் தொடங்கும். அது நீரில் வசிக்குமிடத்தில் நூறு பங்கு தண்ணீருக்கு ஒருபங்கு மது சாரம் விட்டால் அது சீக்கிரத்தில் அவ்வாசனை யுணர்ந்து அவ்வா சனை தனக்கு விஷமாகு மென்று அவ்விடத்தை விட்டு நீங்கிவிடும். நீங்காவிட்டால் அச்சிறு பிராணி இறந்து விடும்.

மதுசாரம் தவளைக்குஞ்சின் வளர்ச்சியைத் தடுக்கின்றது.

டாக்டர் பேசில் பிரைஸ் (Dr. Basil Price) என்பவர் ஒரு சாடியில் சுத்தமான வெறுந் தண்ணீரையும், மற்றொரு சாடியில் சுத்தமான தண்ணீரோடு, ஒவ்வொரு அவுன்சு தண்ணீர்க்கு ஒவ் வொருதுளி மதுசாரமுங் கலந்து நிரப்பினர். அச்சாடிகளுள் சில தவளையின் முட்டைகளை விட்டுவைத்தனர். ஒவ்வொரு சாடியிலுஞ் சிறிது ஆகாரமுஞ் சேர்த்தனர். டாக்டர் பிரைஸ், மதுசாரங் கல வாத தண்ணீரிலுள்ள தவளைக் குஞ்சுகள், மதுசாரங் கலந்த தண் ணீரிலுள்ள தவளைக்குஞ்சுகள் நீந்துவதற்குச் சில நாட்களுக்கு முன்னமே நீந்திக்கொண்டிருந்ததைப் பார்த்தனராம். ஆறி லிருந்து எட்டாம் வாரக் கடைசியில், மதுசாரத் தவளைக் குஞ்சுகள் வளர்ச்சிகுன்றி உருவத்தில் சிறுத்திருந்தனவாம்; அன்றியும், அவை மதுசாரங் கலவாத தண்ணீர்த் தவளைக் குஞ்சுகள் போலச் சுறு சுறுப் பாய் நீந்தி விளையாடாமலும் திடமில்லாமலு மிருந்தனவாம்.

அடைகாக்கும் யந்திரம்—Incubator.

பெட்டைக் கோழி அடைகாக்காமலே முட்டைகள் குஞ்சு பொரிக்கக் கூடுமென்பது உங்களில் அநேகருக்குத் தெரிந்திருக்க லாம். அடைகாக்குங் கோழியின் உஷ்ணம் எந்த அளவிலிருக் குமோ அதே அளவில் உஷ்ணத்தை யுள்ளே கொண்டிருக்கும் பெட் டியை அல்லது அறையை யுடைய அடைகாக்கும் யந்திரத்துள் முட் டைகள் வைக்கப் படுகின்றன.

பிராஞ்சிய னொருவன் (A Frenchman) சோதனை செய்வதற் காக நூறு முட்டைகளை அடைகாக்கும் யந்திரத்துள் வைத்து, அடிக்கடி அப்பெட்டியுள் மதுசார ஆவியை நிரப்பினன். முட்டை

யின் ஓடுகள் நுண்ணிய துவாரங்களுடையன வாதலால் முட்டைக ளுள் சிறிது மதுசாரம் புகுந்து விட்டது. சாதாரணமாக 90 முட் டைகள் பொரிப்பதற்கு 63 முட்டைகள் தான் ஆரோக்கியமான குஞ்சுகள் பொரித்தன. 21 குஞ்சுகள் பலவகையில் அந்தக் கேடா கவும், சில இறகுகள் குட்டையாகவும், சில கால்கள் குட்டையாக வும், சில கால்கள் பழுதாகவும், சில முட்டையினின்று வெளிவந்து இறந்தனவாகவும், சில உயிர்பெறுமலுமே யிருந்தன.

மதுசாரம் பூனைக்குட்டிகளைக் கெடுக்கின்றது.

இரண்டு பூனைக்குட்டிகளுக்கு சிறிதளவு மதுசாரங் கொடுக்கப் பட்டது. அதனுல், அவைகளுக்கு விளையாட விருப்பமில்லை. அவைகட்குத் தேகத்தைச் சுத்தமாக வைக்க மனமில்லை. அவை கட்கு எவற்றிலும் பிரியமில்லை. நாய்களைக் கண்டாலும் ஓட்டம் பிடிப்பதில்லை. அவைகள் எலிகளைப் பிடிப்பதற்குச் சிறிதும் முயற்சி செய்வதில்லை. அவை, அறிவுக்கு இடமான மூளையின் பகுதியில்லாமற் போனது போலிருந்தன. மற்றப் பூனைக்குட்டிகள் நல்லறிவோடு ஒழுங்காயும் ஆரோக்கியமாயு மிருந்தன. அவை சந்தோஷமாக விளையாடிப் பூனைகளின் இயற்கைக் குணம் எப் படியோ அதுபோலவே ஓடியாடுவதற்கு ஆசையோடிருந்தன.

மதுசாரம் சிறு பிள்ளைகளுக்கும் சிறு பெண்களுக்கும் தீங்கு செய்கின்றது.

நமது பட்டணத்திலும் கிராமங்களிலும் நோய் கொண்ட மெலிவான உடம்பையும் அறிவீனத்தையு முடைய சிறு பிள்ளைகளும் பெண்களு மிருக்கின்றனர். ஏன் அவர்களவ்வாறிருக் கின்றனர்? தாய் தந்தையருடைய குடியின் பழக்கத்தாலும், தேக வளர்ச்சிக்குத் தகுந்த ஆகாரம், உடை, சவுக்கியமான வீடு இல்லாமை யாலும் அவர்களவ்வா றிருக்கின்றனர். இதுவு மன்றி, தாய் தந்தை யர் மதுபானஞ் செய்கிறவர்களாதலால் அம்மதுசாரம், அவர்கள் இரத்தத்திலிருந்து, குழந்தை பிறத்தற்கு முன்னே, கருவின் சுக்கு மாந்திரங்களிற் சேருவதால் பிள்ளைகள் அவ்வாறுகின்றனர்.

லண்டன் இராஜதானிக்குரிய பயித்தியக்கார வைத்திய சாலை சூப்ரிண்டெண்டெண்ட் டாக்டர் எப். எச். வாம்ஸ்லி (Dr. F. H. Wamsley) என்பவர், தாய்மாத்திரம் அல்லது தந்தை மாத்திரம்

அல்லது இருவருங் குடியரா யிருந்த 27 குடும்ப வரலாற்றை மிகு சாக்கிரதையோடு விசாரித்தனர். அந்த 27 குடும்பங்களிலும் 212 பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பிறந்திருந்தனர். அவர்களெல்லோரும் பலவித நோய்களுக்கு இரையாயிருந்தனர். சிலர் பித்தர்களாயினர். சிலர் தற்கொலை புரிந்தனர். சிலர் செவிடராயினர். சிலர் நொண்டிகளாயினர். சிலர் நரம்புத்தளர்ந்து நடுக்கமுள்ளவராயினர். அநேகர் குடியராகவே யிருந்து துஷ்டர்களாய்ப் பலராலும் அவமதிக்கப் பட்டனர். மற்றவர்கள் குற்றவாளிகளாயும் பிச்சைக்காரர் முதலிய தாழ்ந்த நிலைமையினராயு மிருந்தனராம்.

மதுசாரம் ஆண்மக்களையும் பெண்மக்களையுங் கெடுத்துவிடுகிறது.

மதுசாரஞ் சிறிதளவாயினும் அது, ஜீவதாதுக்கு விஷமாகுமென்று பல வகை உயிர்களில் அநேக சோதனைகள் செய்து நிரூபிக்கப் பட்டது.

உண்மையில், ஆண் மக்களும் பெண்மக்களும் துர்ப்பாக்கியராய்த் தேக சுகத்தைக் கவனியாமல் ஒவ்வொரு நாளுந் தங்களைத் தாங்களே சோதனை செய்து வருகிறார்கள். குடியர்கள் அசுத்தமான தேகத்தை யுடையவர்களாயும், வேலை செய்வதற்கு மனமில்லாதவர்களாயும், திராணியற்றவர்களாயும், குடியுந் தூக்கமுந் தவிர மற்றக் காரியங்களில் கவலை யில்லாதவர்களாயு மிருப்பதை நீங்களறிந்த தில்லையா ? உயிரின் நிலைமை சூக்குமரந்திரங்களைப் பொறுத்திருக்கின்றது. சூக்குமரந்திரங்களோ ஆரோக்கியமுள்ள ஜீவதாதுவைப் பொறுத்திருக்கின்றன. சூக்குமரந்திரங்களில் மதுசாரஞ் சேருமாயின் அவற்றின் உயிருக்கு ஆபத்துண்டாகும்.

மதுசாரத்தால் எல்லா ஜீவதாதுங் கெட்டுப்போகின்றது.

சிறிதளவு மதுசார மானாலும் எல்லா ஜீவதாதுங் கெட்டுப் போகின்றது. சூக்குமரந்திரங்கள் மதுசாரத்தால் உடனே சாகா விட்டாலும், மதுசாரஞ் சேராத ஆரோக்கியமுள்ள சூக்குமரந்திரங்களிலும், மதுசாரஞ் சேர்ந்த சூக்குமரந்திரங்கள் உயிர் மெலிந்து போம்படி மாறுதலடைகின்றன.

சுகமுள்ள தேகத்திற்கு மதுசாரம் விஷமாகும் :
அதனை ஒழிப்பீராக.

பெண்கள் பக்கம்

தென்தேசத்தில் ஓர் கிராமத்தில் புத்திசாலியான ஒரு கிழவி இருந்தாள். அவள் வனத்திலுள்ள மூலிகைகளைக் கொய்து வந்து அவைகளினால் கஷாயம் மாத்திரை முதலிய ஔஷதங்களைச் செய்து அவ்வூர் ஜனங்களுக்கு ஒவ்வொரு வியாதிக்குந் தகுந்தபடி கொடுத்து வருவது வழக்கம். அதுவுமல்லாமல் எந்தக் குடும்பத்திலாவது சண்டை சச்சரவு பிரிவினை உண்டாயிருந்தால், கிழவி அதை சூக்ஷ்மமாய் அறிந்து சமயம் பார்த்துத் தகுந்த புத்திமதிகளைச் சொல்லி அவர்களை ராசிப்படுத்தி வைப்பாள்.

அவளுடைய புத்தி தீக்ஷணியததைப் பார்த்து யாவரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். சிலர் அவள் மஹா புண்ணியவதி என்று போற்றினார்கள். வேறு சிலரோ அவள் பில்லி சூனியக்காரி என்று அவளை நிந்தித்து, அவமதித்து, அவளைக் கண்டால் அவளோடு பேசப்பயந்து விலகிப்போவார்கள். ஆனால் அந்தக் கிழவி மற்றவர்கள் தன்னைப புகழ்ந்தாலுப் இகழ்ந்தாலும் ஒன்றையுஞ் சட்டை பண்ணாமல், பிறருக்கு நன்மை செய்வதே தன் வேலை யென்று நினைத்து எல்லாரையும் சமமாக நடத்தி அன்போடு காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

அந்தக் கிராமத்தில் மீனாக்ஷி என்று ஒரு பெண்ணிருந்தாள் அவள் தன் மனவருத்தத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு ஒரு நாள் அந்தக்கிழவியிடம் வந்து “ அம்மா! மன்னுயிரைத் துன்பத்தினின்றும் இரக்ஷித்துக்காக்குந் தாயே! நான் ஒரு பெரிய துக்கத்தில் அமிழ்ந்தியிருக்கிறேன். என் எஜமானன் வெகு பொல்லாதவன், பரமதுஷ்டன், மஹாமூர்க்கன், அவன் மனுஷ்னல்ல புலி கரடி கொடிய சிங்கமென்றே சொல்லவேண்டும். பிரதிதினமும் தன் கைசலிக்க என்னை அடிக்கிறானேயன்றிச் சற்றாகிலும் என்னை நேசிக்கிறதே இல்லை. என் முதுகு பொடியாகக் குத்துகிறான். சட்டிபானைகளை யெல்லாம் காலால் உதைத்துப் பொடிப் பொடியாய் நொறுக்குகிறான். திட்டாத திட்டெல்லாம் திட்டுகிறான். அவன் அதிக குடிகாரன். எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அத்துஷ்டனோடு பொறுமையா யிருந்த காலம் போதும். இனிமேல்

2-10371

சகித்துக் கொண்டிருக்க என்னால் மாளாத[illegible] இ[illegible] துஷ்டனைச் சீர்திருத்த ஏதாவது மருந்துண்டா; நீ [illegible] அறிந்தவள் ; உன் சாமர்த்தியத்தினாலே நோயும் அடங்குமே ? ஆதலால் இச்சமயம் எனக்கு எப்படியாவதிரங்கி என் துரதிர்ஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டும் '' என்று கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாகப் பொழிய வாய்விட்டலறி அவளைப் பிரார்த்தித்தாள். அதைக் கேட்ட கிழவி அதிக கனிவோடு அவளைப் பார்த்து, "அம்மா அழ வேண்டாம், நான் அதற்குத்தக்க மருந்து கொடுக்கிறேன். இதுவும் ஒரு விதமான வியாதி தான், இவ்வியாதி உலகத்தில் அநேகருக்குள் பரவி யிருப்பதால் நீ மாத்திரமல்ல, உன்னைப் போல அநேகர் துன்பம் அனுபவிக்கிறார்கள். இது மிகவும் கெட்ட நோய் தான். ஆனாலும் பயமில்லை சற்று பொறு, மருந்துக்கு வேண்டிய சாமான்களெல்லாம் தயாராக வைத்திருக்கிறேன். ஒரு நிமிஷத்தில் கூட்டித் தருகிறேன் '' என்று சொல்லி ஒரு சட்டி நிறையத் தண்ணீர் எடுத்து அதைச் சுற்றிலும் சாணத்தால் நன்றாய் மெழுகி அவள் வைத்திருந்த ஒரு விதத்தூளில் சிறிது அந்தத் தண்ணீரிலும் சிறிது தரையிலும் போட்டு மந்திரிப்பது போலப் பாவித்து அந்தத் தண்ணீரை ஒரு புட்டியில் நிரப்பிப் பத்திரமாய் மூடி மீனாக்ஷி கையில் கொடுத்து, " இது தான் அம்மா மருந்து. நான் சொல்வதைக் கவனமாய்க் கேட்டு அதன்படி செய்; சாயங்காலத்தில் உன் புருஷன் வேலை விட்டு வீட்டுக்கு வருகிறானென்று நீ அறிந்த உடனே இப்புட்டியைத் திறந்து ஒருவாய் தண்ணீர் உறிஞ்சி அதை உட்கொள்ளாமல் வாய் கொப்பளித்துக் கொண்டே இருப்பாயாகில், அவன் உன்னைச் சற்றாகிலும் அடியாது பட்சமாய் பேசி, இன்பமாய்ச் சாப்பிட்டு, துஷ்ட குணம் மாறி, " அவன் மனுஷனல்ல தித்திப்பே'' என்று சொல்லத் தக்கதாக அவ்வளவு சாதுவாகி விடுவான், நான் சொன்னபடி ஒரு மாத மளவும் நீ செய்து வரவேண்டும், அப்புறம் உன் விருப்பம் கைகூடும் மகளே,'' என்றாள்.

அதைக்கேட்டு மீனாக்ஷி " அம்மா இம்மருந்தை எவ்வளவு நேரம் வாயில் கொப்பளிக்கவேண்டும் '' என்று வினவ கிழவி, "மகளே, உன் புருஷன் சோறு சாப்பிட்டு எப்போது படுத்துக் கொள்வானோ அப்போது தான் நீ உன் வாயிலுள்ள மருந்தைத் துப்பி விடலாம்'' என்று சொன்னாள்.

மீனாக்ஷி அதிக சந்தோஷத்தோடு அப்புட்டியை வாங்கிச் சேலையில் சுருட்டிப் பத்திரமாய் வைத்துக்கொண்டு கிழவியை மிகுதியாய்ப் புகழ்ந்துகொண்டே தன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

அன்றைக்கு அவள் புருஷன் வயல்களில் வேலை செய்துவிட்டு இருட்டப் போகும் நேரத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்தான். மீனாக்ஷி தன் புருஷன் வருகிறதைப் பார்த்த மாத்திரத்தில் கிழவி கொடுத்த புட்டியை வெகு ஜாக்கிரதையாய்த் திறந்து ஒரு வாய் மருந்து உறிஞ்சி அம்மருந்தை உட்கொள்ளாமல் கொப்பளித்துக் கொண்டே அவன் வரவுக்காக காத்திருப்பவள் போல் வாசலில் நின்று கொண்டிருந்தாள். அவள் புருஷன் "என்னடி சும்மா நிற்கிறாய் தண்ணீர் கொண்டு வா" என்று சொல்ல, அவள் ஒரு வார்த்தையும் பதில் சொல்லாமல் ஒரு செம்பிலே தண்ணீர் கொண்டு வந்து அவனுடைய கால்களைக் கழுவினாள். அப்புறம் அவன் சாப்பிட உட்கார்ந்து, "கிண்ணி எங்கடி! இந்த வீட்டில் எல்லாம் அலங்கோலமாய்ப் போகிறதே. சீக்கிரம் போய்ச் சோறு கொண்டு வா. செருப்பால் அடிக்கிறேன் பாரடி" என்று அவளை அதட்டி முறு முறுத்துக்கொண்டிருந்தான். அவள் உள்ளம் கோபத்தால் பொங்கின போதிலும் வாயில் மருந்து இருந்தமையால் வாய் திறக்கமாட்டாமல் பற்களைக் கடித்துக்கொண்டு தன் தலையை மட்டும் அசைத்து அசைத்து அவனுக்குச் சாப்பாடுபோட்டு அருகில் நின்றாள்.

அவள் மௌனமாயிருக்கிறதைக் கண்ட அவள் புருஷன், ஆச்சரியப்பட்டு பற்பல கேள்விகளைக் கேட்டான். அவளோ தலை யசைத்ததே தவிர வேறொரு மாறுத்தரமும் கொடாமல் பேசாமலிருந்து விட்டாள், அப்போது அவன் "நம்முடைய பெண்சாதிக்குப் புத்தி வந்ததுபோல் தோன்றுகிறதே, நாம் சொல்லுவதற்கு ஒன்றும் எதிர்த்து வாதாடாமல் நிற்கிறாள். இதென்ன ஆச்சரியம்! புதுமையா யிருக்கிறதே!" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு தன் பெண்சாதிக்கு அன்பான வார்த்தை சொல்லி விட்டுப் பாயை விரித்துக் கொண்டான். மீனாக்ஷியும் வாயிலிருந்த மருந்தைத் துப்பி விட்டு, இது மிகவும் ஆச்சரியமான மருந்து என்று சொல்லி மிகுதியும் சந்தோஷப்பட்டு அதைக் கொடுத்த கிழவியைப் புகழ்ந்து கொண்டே மலர்ந்த முகத்தோடு நித்திரை போனாள்.

இப்படியே ஒரு மாதம் மீனுக்ஷி வாயில் மருந்து கொப்பளித்துப் புருடனுக்கு எதிர்த்துப் பேசாமலும் திட்டாமலும் ஊமையைப் போல் மௌனமா யிருந்தமையால், புருடனும் சந்தோஷப்பட்டு அவளைச் சற்றுவது கோபிப்பதும் இல்லை, அடிப்பதும் இல்லை. ஒரு மாதம் முடிந்தவுடன் மீனுக்ஷி அக்கிழவியிடம் இன்னும் ஒரு மாதத்திற்கு அத்திவ்விய மருந்தைக் கேட்கப் போனுள்.

கிழவியும் நடந்ததைக் கேட்டு, அவளை அதிகத் தயவோடு பார்த்து " அம்மா மகளே, நான் கொடுத்த மருந்து அற்புதமானதல்ல. வெறும் தண்ணீர் தான். நானும் சூனியக்காரி யல்ல. மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்று விரும்பி அதற்குத் தகுந்த யத்னம் பண்ணுகிறதே என் வேலை. புருடனுடைய துஷ்ட குணத்தை மாற்ற அவன் பெண்சாதியால் ஆகுமே யன்றி மற்றெவ் வித ஔஷதங்களினுலும் முடியாது மகளே; அநேகமாய்க் குடும்பம் வாழ்கிறதும் புருடராலல்ல. பெண்களினுலேயே, நற்குணமுள்ள மனைவி சற்குணமுள்ள புருடனைப் பெற்றிருப்பதே வழக்கம். புருடன் வேங்கையானுலுஞ் சாதுவான மனைவி, அவனைத் தணித்து அவன் துஷ்டத்தனத்தை அடக்குவது சுலபம். உன் கணவன் விடியு முன்னே எழுந்து வயல்களுக்குப் போய் வெயிலும் காற்றும் மழையும் பாராமல், பசியோடும் தாகத்தோடும் வேலை செய்து, சாயந்தர வேளையில் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் நீ அவனைத் திட்டி சள சளவென்று வாய்கொடுத்துச் சிறிதேனும் தயவில்லாமல் வாதித்தால் அவன் உன்மேல் வெறுப்புற்றவனுய், உன்னைக் கோபித்து உன் வாயை அடக்க உன்னை அடிப்பது ஆச்சரிய மல்லவே. இனிமேல் உனக்கு மருந்து வேண்டியதில்லை. போனமாதஞ் செய்தது போல வாயை அடக்கிக் கொண்டு உன் புருஷனுக்கு மரியாதை செய் மகளே. அப்பொழுது தான் உனக்கும் அவனுக்கும் சமாதானமும் பாக்கியமும் மாருத வாழ்வும் உண்டாகும்" என்று சொன்னுள்.

மீனுக்ஷி அந்த நற்புத்திகளைக் கேட்டு உண்மைதான் என்று சிரித்துக்கொண்டு, இனி அப்படியே செய்கிறேனென்று கிழவியைப் புகழ்ந்து கொண்டே வீட்டுக்குப் போய் வெகு சந்தோஷமாகத் தன் புருஷனுேடு வாழ்ந்து வந்தாள்.

" பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்"
" தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்"
" நின்றெதிர்பேசு மனையாளில் பேய் நன்று"

(இரஞ்சித போதினி).

கடோரசித்தன் கதை

வ. சு. செங்கல்வராய பிள்ளை. எம். ஏ.

44-ம் பக்கத் தொடர்ச்சி

பிராணிகள் நரகலோகத்தை நிரப்பா விட்டால் உனக்கென்ன கெட்டுப் போயிற்று ? உனக்குத் தான் விருப்புங் கிடையாது வெறுப்புங் கிடையாதே. வீணைப் அலையாமல் இங்கேயே இரு,'' என்றனன். காலனும் "இவன் சொல்வது நியாயமாகத்தான் தோன்றுகின்றது, ஓரிடமாயிருத்தல் சுகமாகத்தான் இருக்கும்'' எனத் தேர்ந்து கடோர சித்தனுடன் இணங்கி இருந்தனன். கடோர சித்தனுங் காலன் அகமகிழ்ந் திருத்தற்கு வேண்டிய அனேக வேடிக்கைக் கதைகளையும் நீதிகளையும் தினந்தோறுஞ் சொல்லுவான் ; அவனுக்குவேண்டிய ருசியுள்ள உணவுகளையும், தின்பண்டங்களையும் பானங்களையுந் தருவான். அவனுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களைத் தந்து தானே அவனை அலங்கரிப்பான். இவ்வாறு, காலனுங் கள்ளனும் ஆப்த சினேகிதர்களாய் நித்தம் உண்டு களிக்குங் காட்சி ஓர் அரிய விநோதக் காட்சியா யிருந்தது. மனிதனுங் காலனும் நட்பினராய் ஒன்றுகூடி களிப்பதை இப்போது தான் கண்டேன் என வானம் நகைப்பது போல வான்மீன்கள் (நக்ஷத்திரங்கள்) விளங்கின. நித்தம் பொழுது விடியுமட்டும் மனிதனுங் கூற்றுவனும் பேசி விளையாடுவார்கள். நரகலோகத்து விஷயங்களும் ரகசியங்களும் கடோரசித்தன் காலன் வாய்க் கேட்டுணர்ந்தான். நிற்க.

சகல மாயைக்கும் மூலாதாரமான மூர்த்தியாம் பெருமான் ஸ்ரீமந் நாராயணன் "என்ன ? மூவுலகினின்றும் தோத்திரமுங் காணோம். பிரார்த்தனையுங் காணோம். தபமெங்கே ? தாபமெங்கே ? ஒன்றுங் காணோமே. கடோரசித்தன் காலன்வாய்ப் பட்ட பிறகு மன்னுயிர்கள் இனிக் கடவுளை வேண்டி வருத்த வேண்டாம் என்று சும்மா இருக்கின்றார்களோ?'' என நினைத்தனர். அச்சமயம், நாரத முனிவர் அங்கு வந்து தோன்றி வணங்கினர். பெருமானும் "அன்ப! நாரத ! நல்ல சமயத்தில் வந்தாய். மூவுலகில் ஏதேனும் விசேஷ முண்டோ ? கடோரசித்தன் காலன் கையிற்

பிணிப்புற்ற பின்னர் அங்கு என்ன விசேஷம்?'' என வினவினர். நாரதரும் "மது சூதனரே! கடோர சித்தன் காலன் கையிற் பிணிப்புற இல்லை. காலன் கடோரசித்தன் கையில் பிணிப் புண்டிருக்கிறான். காலன் இவ்வாறு கட்டியடக்கப் பட்டது முதல் உலகிலுள்ளோர் ஒரே குதூகலமாய் இருக்கின்றார்கள். இறத்தல் என்பது ஒன்று உண்டு என்னும் அச்சம் ஒழிந்து, ஆலயந் தொழுவது சாலவும் வீணென ஒழித்தனர். பூஜை யில்லை, தோத்திர மில்லை, மந்திர மில்லை, ஒழுக்கமில்லை. மனிதர்கள் மாடு போலக் காலங்கழிக்கின்றனர். கோயில்கள் எல்லாம் அடை பட்டுக் கிடக்கின்றன. குருக்கள்மார்களெல்லாம் வரும்படி யின்றிக் கொடும் பசி யுற்றுத் தவிக்கின்றனர். காலனூர் வர முடியாமையால் பசிநோயால் இறத்தலின்றிக் கலங்கு கின்றனர். காய், கனி, சருகு கள் இவற்றை யுண்டு எக்க முறுகின்றனர். காலனோ கொழுகொ ழென்று சதை நிரம்பி, கவலை யின்றி அலைதலின்றி, ஆரோக்கியமாய் இருந்த இடத்திலேயே உண்பதும் உறங்குவதுமாய் இருக்கிறான். கடோர சிததன் இட்டது தான் சட்டம். யாராவது அவனுக்குக் குறுக்குச் சொன்னால் காலனைக் கட்டவிழ்த்து விட்டு விடுவேன் எனக் கூறி அவர்களை அச்சுறுததுகின்றனன்''—என விஸ்தார மாய்க் கூறினர். இக்கதை யெலாம் கேட்டனர் பெருமாள். நன்று நன்று என நகைத்தனர். இந்த மானிடர்கள் இவ்வளவு அறிவிலிகளா! யமனுக்கு அஞ்சித்தானா கடவுளை வணங்கி வந்தனர். இவர்கள் வாழ்த்தா விட்டால் தேவர்கள் வாழ்வது அரிது என நினைத்தனர் போலும். தங்கள் பாபச் சுமைகள் ஒழிவதற்குக் கடவுளைப் பணிய வேண்டும் என்பதை அற மறந்தனர் போலும். பாபம்! கால னொடுங்கவே இவர்கள் பாப வினைகள் மலைபோல வளருகின்றனவே. காலனைக் கட்டவிழ்த்து விட்டால் தான் இம் மனிதர்கள் நன்னெறியைக் கைப்பற்றி உய்வார்கள்—என யோசித்து, நாரதரை நோக்கி "இவ்விஷயங்களை யெல்லாம் யம தரும ராஜரிடம் சொல்லுங்கள்; அவர் கீழ்த்தானே காலன் உத்தி யோகம் பூண்டுள்ளான். உலகில் நடக்கும் அநீதிகளைக் கூறி காலனைக் கட்டினின்றும் அவிழ்த்து விடும்படிச் சொல்லுங்கள் எனக் கூறி அனுப்பினர். நாரதரும் உடனே யமலோகஞ் சென்ற னர். யமதரும ராஜரைக் கண்டு முகமன் கூறினர். யமதரும ராஜரும் "வாரும்! நாரதரே! என்ன விசேஷம்! நரக லோகத் திற் சில தினங்களாகக் கூட்டமே காணோம். ஒரு பைசாசம் கூட

என்னிடம் வர வில்லையே. மனிதர்களுக்குச் சாவில்லை எனச் சிவபெருமான் வரந் தந்து விட்டனரோ! காலன் யாண்டுள்ளான்? என்ன கதியாயினன்? என வினவினர். நாரதரும் "அம்மம்ம! அந்த அதிசயத்தை என்ன என்று கூறுவேன். உமது ப்ரதான மந்திரி காலப்பிரபு கடோரசித்தனது மாயை யிருக்கையிற் சிக்கி அவனது இல்லத்திலேயே ஓரிடத்தமர்ந்து உடலது கொழுத்து உண்பதும் உறங்குவதுமாக நாள் கழிக்கின்றனன். காலனார் கட்டுண்டார் என அறிந்து இம் மாநுடர் செய்யும் அநீதிக்கு அளவில்லை. மனிதனுக்கும் மாட்டுக்கும் பேதமே இல்லா திருக்கின்றது. அறஞ் செய விரும்புவார் இலர். ஆலயந் தொழுவார் இலர். திருக்கோயில்களிலுள்ள குருக்கள் யாவரும் கோயிலுக்கு வருவாரின்றி வருவாய் குன்றி வயிற்றுக்கின்றி வாடுகின்றனர். கடோரசித்த னென்றால் காசினி முழுமையுங் கலங்குகின்றது. யாரேனும் அவனை எதிர்த்தால் காலனைக் கட்டவிழ்த்து விட்டு விடுவேன் என அச்சுறுத்துகின்றனன்." என்றனர். இதைக் கேட்டனர் யமதருமராஜர். புருவம் நெறித்தனர்; கோப நகை செய்தனர்; பாசத்தையுஞ் சூலத்தையும் எடுத்தனர்; எருமைவாகனத் தேறினர்; 'நாரதரே! நன்று நீங்கள் போய் வாருங்கள்' என அவருக்கு விடையளித்துத் தாம் பூலோகத்துக்கு வந்தனர். வரும்போது பூலோகத்தில் அநேக விசித்திரங்களைக் கண்டனர். சுழற் காற்று வீசிக் கடல் கொந்தளிக்கின்றது. கப்பல்கள் பம்பரம் போலச் சுழன்று சாய்கின்றன. கப்பலி லுள்ளவர்களோ அஞ்சுதல் வேண்டாம்; காலன் கட்டுண்டு கிடக்கின்றான்; சாவில்லை; நீருங் காற்றும் ஒன்றுஞ் செய்யாது. எனக் கூறிச் சிரித்தனர். கோயில்களிற் கொள்ளை யிடுங் கள்ளர் மீதும், தொட்டிலிற் கிடக்குங் குழந்தையின் மீதும் இடி விழுகின்றது. "இடியே! நீ இன்னும் பத்து இடியாய்ச் சேர்ந்து எம் மீது விழுந்தாலும் எமக்குப் பயமில்லை, இறப்பு இல்லை" எனச் சொல்லி நகைத்தனர்கள் கள்ளர்கள். 'என் குழந்தையை நீ ஒன்றுஞ் செய்ய முடியாது. என் குழந்தைக்கு நீ ஒரு வாத்தியப் பெட்டி போலும்' என எள்ளி உரையாடினள் அக் குழந்தையின் தாய். பிறன்மனை விழைந்தான் ஒரு காமி. "ஐயோ! இது பாபமாயிற்றே" என அஞ்சினள் அக்காரிகை. "சீ! முட்டாள்! நன்னெறி எது? புன்னெறி எது? பாபம் எது? புண்ணியம் எது? சாவேது? கடவுளேது?" என்றான் ஒழுக்கமற்ற அவ்விடன். இக் காட்சி யெல்லாம் கண்டனர் யமதருமராஜர். நன்று! நன்று!

சிரியுங்கள் ; கூத்தாடுங்கள் ; இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் சிரிப்புங் கெலிப்பும் மறையும் ; பாருங்கள் எனத் தமக்குள் கூறி நேராய்க் கடோரசித்தன் வீட்டுக்குள் நுழைந்தனர். காலன் தனது விசித்ர ஆதனததில் ஆடையாபரணங்களுடன் கொழுத்த மேனியும் மத்தள வயிறும் விளங்க மாப்பிள்ளை போல வீற்றிருப்பதைப் பார்த்தனர். கடோரசித்தன் உணவுக்குவரும் நேரமாயிற்றே என்று அவனை எதிர்பார்த்த வண்ணமாய்க் காலன்.

" இருந்த இடத்தில் எல்லாச் சுகமும் என்னை நாடுமே
ஏழைச் சனங் கடோர சித்தன் தன்னைப் பாடுமே !

வீணலைச்சல் போச்சு போச்சு நித்தம் ஆனந்தம் !
விந்தை யாச்சு இந்த வாழ்வு நித்தம் ஆனந்தம் !

நிந்தை போச்சு சாபம் போச்சு நித்தம் ஆனந்தம் !
விந்தை யாச்சு இந்த வாழ்வு நித்தம் ஆனந்தம் !

எனப் பாடிக் கொண்டு குதூகலமாய் இருப்பதையுங் கண்டனர். உடனே, காலனை நோக்கி ஒரு பெரு மூச்சு விட்டனர்.

(இன்னும் வரும்)

ஜப்பானில் ஸ்திரீகள் நகரங்களிலுள்ள டிராம் வண்டிகளிலும், பஸ்களிலும் கண்டக்டராக யிருக்கிறார்கள். சில ஸ்திரீகள் வாடகை மோட்டார் வண்டி ஓட்டிகளாகவும் இருக்கிறார்கள். டைப் அடிக்கும் குமாஸ்தாக்களாகவும் சுருக்கெழுத்துக் காரர்களாகவும் இன்னும் அனேக சிறுமிகள் சேகவாகளாகவும் பெரிய பெரிய உத்தியோக சாலைகளிலும் வியாபாரங்களிலும் வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். அரசாங்கத்தில் எல்லாப் பாகங்களிலும் வேலையில் பெண்கள் தான் அமர்ந்திருக்கிறார்கள். தாதிகளாகவும் உபாத்தியாயினிகளாகவும் ஹோட்டல்களில் வேலைக்காரிகளாகவும் வீடுகளில் வேலைக்காரிகளாகவும், ஆயிரக் கணக்கான உத்தியோகங்களில் ஸ்திரீகள் இருக்கிறார்கள். இன்னும் அதிசய மென்ன வென்றால் பெரிய இயந்திரங்களை நடத்துவர்களாக ஸ்திரீகள் தான் வேலை செய்கிறார்கள். அவர்கள் தொகை அநேகமாய் பத்து லட்சத்திற்கிருக்கலாம். தொழிற்சாலைகளிலும் சுரங்க வேலைகளிலும் மாதர்கள் சற்றும் களைப்படையாமல் வேலை செய்கிறார்கள். இவைகளெல்லாம் போக அறுபது லட்சம் ஸ்திரீகள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களாம்.

இல்லை

(பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை எழுதியது.)

இல்லை என்னும் பதம் மூன்று எழுத்துக்களால் ஆய ஒரு சிறு சொல். எனினும் அதனால் உலகத்துக்கு விளையும் துன்பங்கள் அளவிடமுடியாதன. அதனால் கேடடைந்த ஞானிகள் அநந்தம்; மகுடமன்னர்கள் அநந்தம்; வர்த்தகர்கள் அநந்தம்; இல்லறத்தார் அநந்தம். சகல சாஸ்திர விற்பன்னர்களான பண்டிதர்களும் இச் சிறு சொல்லை தக்க சமயத்தில் சொல்ல அஞ்சுகின்றனர்; போர் முனையில் முன்வைத்தகால் பின்வாங்காமல் முனைந்து நிற்கும் வீரர்களும் வேண்டும் காலத்து இச்சிறு சொல்லை வழங்க நடுக்கம் கொள்ளுகின்றனர். கோடிசுரர்களான வர்த்தகர்களும் இச்சிறு சொல்லை உச்சரிக்கத் தயங்குகின்றனர். அறநெறி பிறழாது இல்லறம் நடத்தும் கிரகஸ்தர்களும் இச்சிறு சொல்லைக் கண்டால் பயங் கொள்ளுகின்றனர். அம்மவோ! இச்சிறு மொழியின் சக்திதான் என்னே!

ஸ்ரீராமனைக் கண்டு மோகம் கொண்ட சூர்பனகை காகுத்தன் தன் விருப்பத்துக் கிணங்கானெனக் கண்டதும் பழிக்குப் பழி வாங்க எண்ணங் கொண்டு சீதை மீது இராவணனுக்கு மோக முண்டாகுமாறு சூழ்ச்சி செய்தாள். இராவணனோ சகல சாஸ்திர விற்பன்னனான ஞானி; சிறந்த சிவபக்தன்; தன் பக்தி வலிமையினால் பசுபதியிடம் அநந்தம் வரங்கள் பெற்றவன். பிறர்மனை நயத்தல் தீயதென அறியாதவனுமல்ல. எனினும் தன் தங்கையின் சூழ்ச்சிக் கிணங்க மனம் "இல்லை" என்று மறுத்தானில்லை. சூர்ப்பனகையின் துர்ப்போதனைக் கிணங்காது இராவணன் மறுத்திருப்பனேல் இலங்கையழியுமா? பத்துத் தலையும் பனங்காய் போல் போர்க்களத்துருள இராவணன் மாண்டிருப்பனா? இந்திரஜித்தன் இறந்திருப்பனா? கும்பகர்ணன் கொல்லப்பட்டிருப்பானா? தக்க சமயத்து இல்லையென மறுக்க இராவணன் பின்வாங்கியதனால் அவன் பேரும் புகழும் நாடும் நகரும் அழிந்தொழிந்தன. இந்நாளிலும் சீரியனான இராவணன் துஷ்டனெனப் பழிக்கப்படுகின்றான்.

ஆகவே இல்லை என்னும் மறுப்புச் சொல் எவ்வளவு வன்மை யுடையது பாருங்கள். அது புராணக்கதை.

இனி நமது தினவாழ்க்கையைக் கவனிப்போம். ஆப்த நண்பரொருவர் 100 ருபா கடன் கேட்கின்றாரென வைத்துக் கொள்வோம். அவர் நாணயமில்லாதவரா யிருக்கலாம். கடன் கொடுத்தால் திரும்ப வராதென உங்களுக்கு சந்தேக ·மிருக்கலாம். ஆனால் நீங்கள் செய்ய வேண்டிய தென்ன? ‘இல்லை’ என்று தைரியமாகச் சொல்ல வேண்டியதுதான். அதற்கு மாறாக, இல்லை என்றால் நண்பர் வருத்த மடைவா ரென்றெண்ணி, ஏதாவது சாக்குச் சொல்லி மழுப்பப் பார்க்கிறீர்கள். “தற்காலம் ரொக்கப்பணமில்லை. சாத்தம் பிள்ளை ஒருவாரத்தில் சொஞ்சம் பணம் தருவான். அப்பொழுது தருகிறேன்” என ஒரு வீண் சமாதானம் சொல்லி அனுப்புகிறீர்கள். நண்பரும் உங்கள் வார்த்தையைப் பூரணமாக நம்பிப் போகிறார். மீண்டும் ஒரு வாரம் கழித்து வருகிறார். அப்பொழுதும் ஏதேனும் சாக்குச் சொல்லி அனுப்புகிறீர்கள். இப்படிப் பல நாள் நடந்த பின்பு நண்பர் காலோய்ந்து, மனஞ் சோர்ந்து ஏமாற்ற மடைந்து மீண்டுவரா யெண்ணத்தோடு திரும்பிவிடுகிறார். இருவருக்கும் பகை ஏற்படுகிறது. ஆதியில் நண்பரின் மனவருத்தத்துக்கு அஞ்சி சாக்குச் சொன்ன நீங்கள் அவருக்கு என்றும் அழியா மனத்துயரை உண்டு பண்ணுகிறீர்கள். அம்மட்டோ! நண்பர் பார்வையில் நீங்கள் பொய்யனும், ஏமாற்றக்காரரும் ஆகிறீர்கள். நண்பரின் நாணய மின்மை எண்ணி பணம் கொடுக்க மறுத்த தங்களைத் தங்கள் நன்பர் நாணய மற்றவரென எண்ணும்படி நேருகிறது. ஆதியிலேயே இல்லை யென்று மறுத்திருந்தால் தங்கள் பேருக்கு இழுக்குண்டாகுமா? தங்கள் நண்பர் ஏமாற்ற மடைந்திருப்பாரா? நடந்து நடந்து காலை களைத்திருப்பாரா? ‘இல்லை’ யென்று சொன்ன நேரத்தில் சொற்ப மனவருத்தம் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அது தீராப்பகையாக முற்றாது. உண்மையாகவே தங்கள் நண்பரின் மனவருத்தத்துக்கு தாங்கள் அஞ்சியிருந்தால் தருமமென எண்ணி அவர் கேட்ட தொகையைக் கொடுத்துத் தொலைத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால் உங்கள் பணம் மட்டுந்தான் நஷ்டமாகும். நீங்கள் பொய்யன், ஏமாற்றுக்காரன் எனப் பெயர் எடுத்திருக்க மாட்டீர்கள். தங்கள்

நண்பரும் பலநாள் நடந்து ஏமாற்ற மடைந்திருக்க மாட்டார். அத்துடனும் நிற்க வில்லை. நீங்கள் கொடுப்பதாக நம்பி அவர் பணத்துக்கு வேறு முயற்சி செய்யாமல் கடைசியில் அவர் காரியமும் நஷ்ட மடைந்திருக்கும். இவ்வளவு இடுக்கண்களும் எதனால் உண்டாயின 'இல்லை' யெனச் சொல்ல, தங்களுக்கு மனவுறுதியில்லாதிருந்ததினால்.

நான் அனுபவத்தில் கண்ட ஒரு திருஷ்டாந்தத்தை இப்பொழுது கூறுகிறேன்.

ஒருவன் ஒரு பிரபுவுக்கு 1000 ரூபா கடன் கொடுத்திருந்தான். பிரபு பாப்பர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நிலையிலாய் விட்டார். கடன் கொடுத்தவனுக்குப் பிரபுவிடத்தில் மிகுந்த மதிப்புண்டு. பிரபுவினால் அவன் பல உபகாரங்கள் பெற்றவன். பிரபு அவனுக்கு சன்மானமாகக் கொடுத்திருப்பவைகளுக்கு விலை போட்டுப் பார்த்தால் கடன் தொகைக்கு இரட்டிப்பாகும். ஆகவே அவனும் பிரபுவிடம் பணத்தை நெருக்கிக் கேட்கவில்லை. கடைசியில் அவனுக்னுக் கலியாணம் வந்தது. அவன் பணக்காரனல்லாததினால் பிரபுவிடத்திலிருந்து கொஞ்சத் தொகையாவது பெறவேண்டு மென்று எண்ணி பிரபுவிடத்தில் தன் எண்ணததைத் தெரிவித்தான். பிரபுவும் "ரொக்கப் பணமில்லை முகூர்த்த வேஷ்டியும் பெண்ணுக்குப் பட்டும் நான் வாங்கித் தருகிறேன். மற்றவைகளுக் கெல்லாம் நீ வேறு ஏற்பாடு செய்து கொள்." என்று கட்டளை யிட்டார். அவனும் அப்படியே செய்தான். பிரபு கட்டளை யிடும்போது தன் கட்டளைப்படி நடக்க சக்தியில்லை யென்று அவருக்கே தெரியும். எனினும் ஒன்று மில்லையென்று கையை விரித்தால் அவன் மனம் நோவானே என்றெண்ணி ஒரு சமாளிப்புச் சமாதானஞ் சொல்லி வைத்தார். பிரபுவின் அந்தரங்க நிலைமையை அவன் நன்கறிந்தவனையால் அடிக்கடி வந்து பிரபு விடம் நினைப்பூட்டிக் கொண்டிருந்தான். பிரபுவும் அவன் வரும்போதெல்லாம் "பயப்படாதே! நான் இருக்கிறேன்." என்று தைரியம் சொல்லி அனுப்பினார். கடைசியில் முகூர்த்த நாளும் வந்தது. பகல் 12-மணிக்கு முகூர்த்தம். காலை 6 மணிக்கு அவன் வந்தான். 8 மணிக்கு முகூர்த்த வேஷ்டியும் பட்டும் கொண்டு வருவதாகச் சொல்லி பிரபு அனுப்பி விட்டார். மணி 11-ஆயிற்று. மாப்பிள்ளை மணவறையில் ஏறும் சமய

மும் அடுத்து வாத்தியகோஷம் மும்முரமாக நடக்கிறது. ஊராரெல்லாரும் வந்து விட்டனர். முகூர்த்த வேஷ்டியும் பட்டும் மட்டும் வரவில்லை. மாப்பிள்ளை பிரபு வீட்டுக்கு ஆள் அனுப்பினுர். பிரபு வீட்டில் இல்லை. ஊரெங்கும் தேடினுர்கள். பிரபுவைக் காணவில்லை. மணி 12-ம் கழிந்தது. பெண்வீட்டார் நெருக்குகின்றனர். மாப்பிள்ளை கண்ணீர் விடுகிருர்; ஊரார் நகைக்கின்றனர். பெண்ணின் தகப்பனுர் யோக்கியர். சங்கதியை அறிந்துகொண்டார். இரண்டாம் பேருக்கு தெரியாமல் பெண்ணின் கழுத்தில் கிடந்த ஒரு இரவல் நகையை வாங்கிக்கொண்டு கடைத் தெருவுக்கு ஓடினுர். முகூர்த்தப் பட்டும் வேஷ்டியும் கொண்டுவந்தார். முகூர்த்தம் வேளை தப்பியானுலும் மங்களமாக முடிந்தது.

பிரபு 'இல்லை' என்று சொல்ல அஞ்சியதினுல் எவ்வளவு அநர்த்தம் விளைந்தது பாருங்கள்.

நண்பரே தாங்கள் இல்லையென்று சொல்ல இனி அஞ்சுவீர்களா ?

'லீடர்' பத்திரிகையில் கீழ்க்கண்ட விபரம் வெளியாகி யிருக்கின்றது. அலகாபாத் நகர அபிவிருத்தி டிரஸ்ட் அதிகாரிகள் புதிய ரஸ்தா போடுவதற்கு வேலைகள் நடத்திக் கொண்டிருக்கையில் சென்ற வெள்ளிக்கிழமை பூமிக்குள்ளிருந்து தொழிலாளிகள் புதையல் ஒன்று தோண்டி எடுத்தார்கள். ரஸ்தாவை விரிவாக்குவதன் பொருட்டு ஒரு வீட்டைத் தோண்டும்போது வெள்ளி நாணயங்கள் நிறைந்த பானை யொன்று கிடைத்தது. அதனைப் போலீசாரும் ஏராளமான ஜனக்கூட்டத்தினரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்புதையலில் 4000 ரூபாய்களிருந்தன. அவற்றுள் 3999 ரூ. 1834-ம் வருடத்து ஆருவது வில்லியம், 1840 வருடத்து விக்டோரியா மகாராணியின் காலத்து நாணயங்கள். ஒரு ரூபாய் ஷா ஆலம் காலத்து நாணயம், என்பதற்கு எழுத்துக்கள் அச்சிடப் பட்டிருந்தன. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உத்தரவுப்படி நகர அபிவிருத்தி டிரஸ்ட் அதிகாரிகள் புதையலை நகர போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.



ஸ்ரீ காசி, பனாரஸ் ஸிட்டி ரயில்வே ஸ்டேஷன்.

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈசி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை. முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலிய வற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வ ரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகிதது குணமடையச் செய்த சிறந்த சிரோ ரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ காலரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினால் ஷை மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக் கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந் தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுக மான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதார், பாணம்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பர்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:—மசர்ஸ். தாதா அண்டு கோ.,

சைனாபஜார் ரோட், மதறாஸ்.

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா **3—4—0.**

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம அடங்கிய கேட்லாக் இனாமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

"His Master's Voice"

உங்களுக்குத் தேவையான

:: கிராமபோன்கள் ::
:: ரிக்கார்டுகள் ::
:: ஹார்மோனியங்கள் ::
:: பிடில் முதலிய வாத்திய ::
:: கருவிகளுக்கும் ::
:: சைகிள்கள் ::
:: மோட்டார் டயர்கள் ::
:: மோட்டார் ட்யூப்கள் ::
:: மற்றுமுள்ள, சைகிள் ::
:: மோட்டார் சாமான்களும் ::
:: கொடக் பில்ம், கேமரா ::
:: போட்டோ கருவிகளுக்கும் ::

பிற இடங்களுக்கு எழுதுமுன்

எங்களுக்கு எழுதுங்கள்

கேட்லாக் இனாம்.

HOMER & CO.,

175, Broadway, : : MADRAS.

30 வருடகாலமாய் உலகப்பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்.

வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தி யுள்ளவருக்கும் அதிகஉபயோகமானது.

அமிருதாமலகதைலம்

நேத்ரரோகிகளுக்கும் சிரோரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

சிரஸ்ஸையும் கண்களையும் எப்போதும் காப்பாற்றும்.

எல்லாவித சிரோ ரோகங்களையும் போக்கும்

பாரிசநோய்களை தூரமாக்கும் கன்னங்கள் நோயை நிர்மூலமாக்கும் பீனஸ ரோகத்தை வரவொட்டாது மூளைக்கு வலிவை யுண்டாக்கும். காது நோய்களை போக்கடிக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியை யுண்டாக்கும்.

அபஸ்மாரத்தை தூரப்படுத்தும் தலை நரம்புகளுக்கு பலத்தை கொடுக்கும்.

நேத்ரரோகங்களுக்கு ஹிதமானது மூர்ச்சைகளைப் போக்கும்.

தலைபுண்களை போக்கடிக்கும் மயிரை நரைக்கவொட்டாமல் செய்யும்.

மயிரை பட்டுபோல் வளரச் செய்யும் நரைத்த மயிரை சுருக்கச் செய்யும்.

யோசனை செய்வோருக்கு ரொம்பவும் மேன்மையானது.

தலை யிடியை நிர்மூலமாக்கும்.

வித்யார்த்திகளுக்கு சர்வதாஹிதம் சர்மரோகிகளுக்கு நல்லதைச் செய்யும். தலை எரிச்சலை போக்கும் அதிக நித்திரையைகுறைக்கும் ஆக்கமின்மையை போக்கும். இதின் குணங்கள் அனுபவமடைந்தவருக்கு தெரியும்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.

இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151 கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287 Madras.**

9-ம் பதிப்பு !　　　வெளிவந்து விட்டது　　　9-ம் பதிப்பு !!

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்தி ஐம்பதினாயிரம் ஜனங்களுக்கு சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும் நிகரற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிட மிருந்து உயர்ந்த நற்சாக்ஷி பத்திரம் வாங்கப்பட்டது மான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான்

வெளிவந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய் விட்டன உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்றுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது, இப்பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு! அணா முதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பல போலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன, ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதாவென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. **2.**

வி. பி. தபால் செலவு 0　8　0.

தி. இராஜகோபால் முதலியார்

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : : காசி.